Registered as a NewsPaper.

பக்கங்கள்: -பத்து

விலை ரூபா 10.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 ஆனி 01 ஹிஜ்ரி 1427 ஜ அவ்வல் 18 (15.06.2006) வியாழக்கிழமை இதழ் 257

யாழ்.நகரில் தனித்துவமான
கலைநயம் மிக்க துல்லியமான
அச்சுவேலைகளுக்கு
SP சிறந்த இடம்
சுரபி பதிப்பகம்
267, நாவலர் வீதி யாழ்ப்பாணம்.

# சமதரப்பு நிலை ஏற்படுத்துவோம்!



## தாயகம் திரும்பிய தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

கிளிநொச்சி—

இருதரப்பு சமநிலையை இலங்கை அரசு ஏற்காவிட்டால் அந்த நிலையை நாமே உருவாக்குவோம் என -விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

ஒஸ்லோ பயணத்தை முடித்துக் கொண்டு தாயகம் திரும்பிய பின்னர் கிளிநொச்சியில் செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நோர்வேக்கான பயணத்தை மேற்கொண்டிருந்த தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன், சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் உள்ளடங்கிய தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் (10 ஆம் பக்கம் பார்க்க)

## மங்கள சமரவீரவுக்கு எதிராக நோர்வேயில் ஆர்ப்பாட்டம்!

ஒஸ்லோ—

நோர்வே மன்னரை இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர சந்தித்து கலந்துரையாடிக்கொண்டிருந்தபோது அரச மாளிகைக்கு வெளியே நூற்றுக்கணக்கான தமிழர்கள் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நோர்வே மன்னர் 5 ஆம் ஜெறால்ட்டை நேற்றுப் பிற்பகல் 1.45 (10 ஆம் பக்கம் பார்க்க)



## இரு ஊர்காவல் படையினர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலி!

வவுனியா—

வவுனியாவில் ஊர்காவல்படையைச் சேர்ந்த ஒருவர் நேற்றுக்காலை சுட்டுக்கொல்லப்பட்டார்.

வவுனியா - மாமடுவ பகுதியில் நேற்றுக் காலை 6.15 மணியளவில் இந்தச்சம்பவம் இடம்பெற்றது.

இதில் பலியானவர் ஊர்காவல்படையைச் சேர்ந்த வசந்தசந்தான செனிவிரத்ன (வயது22) எனத் தெரியவந்தது. (10 ஆம் பக்கம் பார்க்க)



## குடாநாட்டில் பரவலான தாக்குதல்; ராணுவச் சிப்பாய் பலி, சிலர் காயம்!

யாழ்ப்பாணம்—

யாழ்.குடாநாட்டில் நேற்று படையினர்மீதும், பொலிஸார்மீதும் பரவலாக நடத்தப்பட்ட தாக்குதல்களில் இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர்

உள்ள கல்வியங்காடு சட்டநாதர் கோவிலடியில் இராணுவத்தினர் மீது நேற்று நண்பகல் தாக்குதல் நடத்தப்பட்டது.

மோட்டார் சைக்கிள் ஒன்றை

கிச்சூடு நடத்தப்பட்டது.

இதையடுத்து இருதரப்பும் பரஸ்பரம் மோதலில் ஈடுபட்டனர். இந்தச் சம்பவத்தில் இராணுவத் தரப்பில் லான்ஸ் கோப்ரல் விக்ரர் (வயது 29)

## படையினரின் சூட்டில் இளைஞன் உயிரிழப்பு

தென்மராட்சி—

எழுதுமட்டுவாழ் - கொட்டுக் கரைக்குளம் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இளைஞர் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டது.

சுமார் இருபது வயது மதிக்கத்தக்க இளைஞனின் உடலின் அனைத்

நேற்றுமாலை கொடிகாமம் பொலிஸார் சகிதம் சம்பவ இடத்திற்குச் சென்ற சாவகச்சேரி மாவட்ட நீதிவான் அ.பிறேம்சங்கர் விசாரணையை மேற்கொண்டதுடன், சடலத்தையாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்து விசாரணையின் பின்னர், உறவினர்களிடம் கையளிக்குமாறு

யாழ்ப்பாணம் —

யாழ்.குடாநாட்டில் நேற்று படையினர்மீதும், பொலிஸார்மீதும் பரவலாக நடத்தப்பட்ட தாக்குதல்களில் இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார். மேலும் சிலர் காயமுற்றதாகக் கூறப்படுகிறது.

• யாழ் - பருத்தித்துறை வீதியில் உள்ள கல்வியங்காடு சட்டநாதர் கோவிலடியில் இராணுவத்தினர் மீது நேற்று நண்பகல் தாக்குதல் நடத்தப்பட்டது.

மோட்டார் சைக்கிள் ஒன்றை மறித்துச் சோதனையிட்ட படையினர் மீது நேற்றுப் பிற்பகல் 1.35 மணியளவில் ஆயுதபாணிகளால் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது.

இதையடுத்து இருதரப்பும் பரஸ்பரம் மோதலில் ஈடுபட்டனர். இந்தச் சம்பவத்தில் இராணுவத் தரப்பில் லான்ஸ் கோப்ரல் விக்ரர் (வயது 29) என்பவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தை அடுத்து கல்வியங் (10 ஆம் பக்கம் பார்க்க)

சூட்டுக் காயங்களுடன் இளைஞர் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டது.

சுமார் இருபது வயது மதிக்கத்தக்க இளைஞனின் உடலின் அனைத்துப் பகுதிகளிலும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் இருப்பதாக பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவித்தன.

அ.பிறேம்சங்கர் விசாரணையை மேற்கொண்டதுடன், சடலத்தையாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்து விசாரணையின் பின்னர், உறவினர்களிடம் கையளிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இதேவேளை, பிரஸ்தாப இளைஞனின் (10 ஆம் பக்கம் பார்க்க)

# மங்களவுக்கு உயர்வரவேற்பு; தமிழ்மக்கள் கவலையடைவர்!

## சொல்ஹெய்ம் தெரிவிப்பு



கொழும்பு —

இலங்கைவெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு நோர்வேயில் வழமைக்கு மாறான உயர்நிலை அரசியல் வரவேற்பு அளிக்கப்படுவதால்- தமிழர்கள் கவலையடையக் கூடும் என்று நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக்சொல்ஹெய்ம் தெரிவித்தார்.

'என்ஆர்கோ' தொலைக்காட்சியின் இணையச் செய்திக்கு எரிக் சொல்ஹெய்ம் பேட்டியளிக்கும்போது - (10 ஆம் பக்கம் பார்க்க)

# கொட்டடியில் குடும்பஸ்தர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலி

யாழ்ப்பாணம் —

கொட்டடிப்பகுதியில் நேற்று மதியம் குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவத்தில் கொட்டடியைச் சேர்ந்த பிலிப் மரியநாயகம்(வயது-56) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவர்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது-

நேற்று நண்பகல் 12மணியளவில் கொட்டடி வீதியில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போது மோட்டார் சைக்கிளில் வந்த இரு இனந்தெரியாத நபர்கள் இவரைச் சுட்டுக் கொன்றுவிட்டுத் தப்பிச் சென்றனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற யாழ்ப்பாணம் பொலிஸார் (10 ஆம் பக்கம் பார்க்க)

## புலனாய்வு அதிகாரியை வவுனியாவில் காணவில்லை

கொழும்பு —

வவுனியா- கிடாச்சூரி இராணுவ முகாமில் கடமையாற்றிய இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த லெப்ரினன்ட் தர அதிகாரியை கடந்த இரண்டு வாரங்களாக காணவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

குருநாகல் வாரியப்புல பிரதேசத்தைச் சேர்ந்த லெப்ரினன்ட் ராஜி லக்ஷ்மன் பத்திரன (வயது30) என்பவரே காணாமற்போயுள்ளார். இவர் 562 ஆவது பிரிகேட்டின் தலைமையகத்தில் புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தராக பணிபுரிந்தார். (10 ஆம் பக்கம் பார்க்க)

## காவலரணில் இருந்த சிப்பாயை காணவில்லை

கொழும்பு —

வவுனியா - ஓமந்தை முன்னரங்க காவல் நிலையில் பணியாற்றிய இராணுவச் சிப்பாய் ஒருவர் காணாமல் போயிருப்பதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் முதல் இவர் காணாமல் போயிருப்பதாகவும் - நள்ளிரவில் காவலரணிலிருந்த இவர் காணாமற்போன விடயம் பின்னரேயே அதிகாரிகளுக்கு தெரியவந்தது.

காணாமற்போன இராணுவச் சிப்பாயைத் தேடும் நடவடிக்கைகள் இடம்பெற்றுவருவதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

## மட்டக்களப்பில் 2 பொலிஸார் காயம்

மட்டக்களப்பு —

மட்டக்களப்பில் பொலிஸார்மீது நடத்தப்பட்ட கிரனேட் தாக்குதலில் இரு பொலிஸார் காயமடைந்தனர்.

ஏறாவூர் - ரெலிக்கொம் அலுவலக சந்தியிலுள்ள வீதித்தடையில் காவலுக்கு நின்ற பொலிஸார்மீதே இந்தத்தாக்குதல் நடத்தப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் இரு பொலிஸார் காயமடைந்தனர்.

காயமுற்ற பொலிஸார் மட்டக்களப்பு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## மனைவியின் கண்முன்னே கணவர் சுட்டுக்கொலை!

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு -வாகனேரியில் படையினரால் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் மாலை சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்த சம்பவம் தொடர்பாக சுட்டுக்கொல்லப்பட்ட நபர் தனது மனைவியுடன் சைக்கிளில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான வாகனேரி - முள்ளிவெட்டுவான் பகுதியிலிருந்து ஓட்டமாவடிக்கு சென்று கொண்டிருந்தார்.

அப்போது (10 ஆம் பக்கம் பார்க்க)




# ஜொலிக்காத நட்சத்திரங்கள்



பேர்ளின்—

இதுவரை நடைபெற்ற முதல் சுற்றுப்போட்டிகளில் வெகுவாக எதிர்பார்க்கப்பட்ட ஆட்டம் பிரிவு F பிரேசில் எதிர் குரோஷியா ஆட்டமாகும். பிரேசிலின் வெற்றியில் யாருக்கும் சந்தேகமில்லை.

இவர்களுடன் சமநிலையில் முடித்தாலே பெரும்வெற்றி என்று கூறியிருந்தார் குரோஷியப் பயிற்றுனர். ஆனால், ஆட்டம் வெறும் 1-0 என்று முடிந்ததும் ஒரு விமர்சகர் பிரேசில் அணியின் பலவீனங்கள் என்று ஒரு பக்கம் உண்டு என்று மிகச்சரியாக கூறியிருந்தார்.





ஏனெனில், முதல் அரையிறுதி ஆட்டத்தில் குறிப்பிட்ட சிலரை - அதுவும் சிறப்பாக ரொனால்டோவைக் கட்டிப்போட்ட குரோஷிய அணியின் சாதுரியம் - இரண்டாவது அரைப் பாகத்தில் குரோஷிய வீரர்கள் வேகங்கொண்டு பிரேசில் எதிர் எல்லையைத் தாக்கிய வேகம் என்பன அற்புதமானவை.

பிரேசில் கோல்காப்பு வீரர் டிடாவுக்கு இந்த வகையில் முதன்மை புள்ளி கொடுத்தே ஆகவேண்டும். அதேவேளை, குரோஷிய வீரர்களின் கடும் கண்காணிப்பையும் மீறி காகா (KAKA) ஒரு கோல் போட்டாரென்றால் அது முதன்மையான கோல்தான்.

இறுதி வேளையில் ரொனால்டின்ஹோவின் அற்புதமான HEADER ஒன்று குரோஷிய கோல்காப்பு வீரர் பிளெடிகோசாவால் எப்படிக் கணிக்கப்பட்டு தடுக்கப்பட்டது என்பது ரசிகர்களுக்கு ஒரு ஆச்சரியம்தான்.

அற்புதமான ஆட்டங்களைத் தொலைக்காட்சியில் live ஆகப்பார்க்கும் சந்தர்ப்பம் எங்களுக்கு மிகக் குறைவு. இருந்தும் Eye Channel திடீரென்று பிரேசில் - குரோசிய ஆட்டம் நேரடியாகக் காண்பிக்கப்படும் என்று அறிவித்ததும் யாழ்ப்பாணத்தில் பல்லாயிரக்கணக்கான ரசிகர்கள் இரவுத் தூக்கத்தை சந்தோசமாகத் தொலைத்தார்கள்.

Eye Channel எதிர்வரும் நாட்களி



லும் இப்படி அடிக்கடி யாழ்ப்பாண ரசிகர்களின் நித்திரையைத் தொலைக்கலாமே!

## இன்றைய ஆட்டங்கள்

| | | |
|---|---|---|
| ஈக்குவடோர் -கோஸ்டாரிக்கா | A பிரிவு | (ஹம்பேர்க் 6.30) |
| இங்கிலாந்து -டிரினட்டுபாகோ | B பிரிவு | (நியூரம்பேர்க் 9.30) |
| சுவீடன் - பராகுவே | B பிரிவு | (பேர்லின் 12.30) |

## கோல் மழையில் ஸ்பெயின்



லீப்சிக்—

ஜேர்மனியில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்டத் திருவிழாவில்



நேற்று மாலை நடைபெற்ற ஆட்டத்தில் ஸ்பெயின் அணி 4 கோல்களைப் போட்டதுடன் - உக்ரேன் அணியை ஒரு கோல்கூடப் போடமுடியாதபடி வெற்றிபெற்றது.

43 ஆயிரம் ரசிகர்கள் திரண்டிருந்த மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டி தொடங்கி 13 ஆவது நிமிடத்திலேயே ஸ்பெயின் வீரர் அலோன்ஸோ முதலாவது கோலைப் போட்டார்.

இதன்பின்னர் 4 நிமிடங்கள் கழித்து டேவிட் வில்லா FREE KICK மூலம் அடித்த பந்து கோல் கம்பத்துக்குள் நுழைந்தது.

முதல் பாதி ஆட்டத்தில் ஸ்பெயின் அணி முன்னிலை வகிக்க 2 ஆவது பாதி ஆட்டம் தொடங்கியது.

இரண்டே நிமிடங்களில் உக்ரேன் வீரர் வசூக் நடுவரால் சிவப்பு அட்டை காண்பிக்கப்பட்டு மைதானத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்.

ஜேர்மனியில் 30 பாகை C இற்கு மேல் தகித்துக்கொண்டிருந்த வெயிலால் உக்ரேனிய வீரர்கள் விளையாடமுடியாமல் திணறிக் கொண்டிருந்தனர்.

10 வீரர்களுடன் உக்ரேன் அணி ஆட்டத்தைத் தொடர்ந்துகொண்டிருக்க 48 ஆவது நிமிடத்திலேயே ஸ்பெயின் வீரர் பென் 3 ஆவது கோலை அடித்து அசத்தினார்.

இந்த நிலையில் ஆட்டம் முடிவுக் கட்டத்தை நோக்கி நெருங்கிக் கொண்டிருந்தபோது 81 ஆவது நிமிடத்தில் பெர்னாண்டோ டோஸ் பனால்டி உதைமூலம் ஒரு கோலை



அடித்து அணியின் வெற்றியை நிலை நிறுத்தினார்.


இந்தப் போட்டியில் 4:0 என்ற அடிப்படையில் வெற்றிபெற்ற ஸ்பெயின் 3 புள்ளிகளைப் பெற்றுள்ளது.

## மூச்சடங்கிப்போன பிரான்ஸ்



ஸ்ரட்கார்ட்—

பிரிவு G யில் இரண்டு ஐரோப்பிய நாடுகள். ஒரு ஆசிய நாடு தென்கொரியா, ஒரு ஆபிரிக்க நாடு ரோகோ







(TOGO).

இதில் ஐரோப்பிய நாடுகளான பிரான்ஸும் சுவிற்சர்லாந்தும் கலந்துகொள்ளும் போட்டி ஆர்வத்துடன் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், இருதரப்புமே கோல் எதுவும் போடாத சமநிலை ஆட்டமாக இது முடிவடைந்துவிட்டது.

பிரான்ஸ் தன்னை நிரூபித்துக் கொள்ள ஒரு சந்தர்ப்பமாக இதனை எண்ணியிருந்தாலும் - அது அவர்களுக்குப் பெரும் ஏமாற்றமாக முடிந்துவிட்டது.

இதேவேளை, 1998 மற்றும் 2002 இல் நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டிகளில் கலந்துகொள்ளும் தகைமைபெறத் தவறிய சுவிற்சர்லாந்துக்கும் வெற்றிமீது வெற்றி குவிக்கவேண்டும் என்ற எண்ணம் இருந்திருக்கும். அதுவும் நிறைவேறவில்லை.

ஆட்டத்தின் ஆரம்பத்திலேயே இரண்டு அணிகளும் தொடக்க வேகத்தில் கோல்போடும் சந்தர்ப்பங்களைப் பெற்றாலும், அது அவர்களாலேயே தவறவிடப்பட்டன.

நட்சத்திர வீரர் தியரி ஹென்றி மிகவும் சிறப்பாக ஆடியது இந்த ஆட்டத்தின் குறிப்பிடத்தக்க அம்சம். ஆனால், அவர் பந்தை வேகமாக கொண்டு சென்று எதிரணிக் கோல்கம்பத்தைப் பார்க்கும்போது பந்தை வரவேற்க தன் அணிவீரர்கள் காணப்படாமை அவருக்கு வெறுப்பேற்றி இருக்கும்.

இதேவேளை, 23 ஆவது நிமிடத்தில் சுவிற்சர்லாந்து வீரர் அடித்த FREE KICK கோல்காப்பு வீரரின் அதீத சாமர்த்தியத்தால் தவறிப்போய் விட்டது.

இதேவேளை, 37 ஆவது நிமிடத்தில் பிரான்ஸ் வீரர் பிராங்க் றிபேரி தனக்குரிய பந்தை கோலாக்காமல் தியரி ஹென்றியிடம் தட்டி அருமையானதொரு சந்தர்ப்பம் இழக்கப்பட்டு



விட்டது.

எனினும், பொதுவில் பிரான்ஸ் - சுவிற்சர்லாந்துக்கு ஒப்பீட்டளவில் நிறையவே அழுத்தத்தைக் கொடுத்தது என்பது உண்மை. மொத்தத்தில் பந்து இரண்டு புறமும் அலைக்கழிந்ததே ஒழிய எதாவது ஒரு வலைக்குள் புகுந்து தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்ள சந்தர்ப்பமே இல்லாமல் போய் விட்டது.

உண்மையில் இரண்டு அணிகளிலும் நட்சத்திரங்கள் அதிகம். அதுவும் பிரான்ஸ் அணியில் தியரி ஹென்றி, துராம், சினெடின் சினாடே, வியேரா என்ற மிகப்பிரபல்யங்கள் அணிவகுத்திருந்தார்கள்.

ஆனால், நிறைய எதிர்பார்ப்போடு களம்மிறங்கிய பிரான்ஸ் 'வெறுங்கையோடு இலங்கை புக்கான்' நிலைக்கு ஆளாகிப்போனது தான் துயரம்.

# அரசு - புலிகள் பேச்சுக்கு வாய்ப்பு அதிகமாக உண்டு!



## விசேட தூதுவர் பௌயர்

கொழும்பு —

அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் பேச்சுவார்த்தைக்கு மீண்டும் செல்வதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக இருப்பதாக இலங்கைக்கான நோர்வேயின் விசேட தூதுவர் ஜோன் ஹன்சன் பௌயர் தெரிவித்தார்.

பி.பி.சி தமிழ் செய்திச் சேவைக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

பேச்சுக்களை விரைவில் ஆரம்பிக்கவேண்டியதற்கான வழிகளைக் கண்டுபிடிக்கவேண்டியது அதனோடு சம்பந்தப்பட்ட இரண்டு தரப்பினுடைய பொறுப்பாகும்.

சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பாக எத்தகைய வழிமுறைகளை எடுக்கவேண்டும் என்பது குறித்து அரசாங்கத்துடனும், விடுதலைப் புலிகளுடனும் நாம் தொடர்ந்தும் பேச்சு நடத்திவருகிறோம்.

இருதரப்பினரும் பேச்சுவார்த்தைக்கு மீண்டும் போவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றபோதும் - தற்போது அதிகரித்திருக்கின்ற வன்முறைச் சூழலைத் தவிர்த்துக்கொள்வதன் மூலம் சமாதானத்தை நிலைநாட்டிக் கொள்ளமுடியும்.

இலங்கையில் மீண்டும் ஓர் யுத்தம் ஏற்படுவதை நாம் விரும்பவில்லை. ஆகவேதான் சமாதானத்தை ஏற்படுத்தவேண்டும் என்பதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# சமாதானமே முக்கிய தேவை

## என்கிறார் நோர்வே முன்னாள் பிரதமர்

கொழும்பு —

இலங்கையர் அனைவருக்கும் சமாதானம் மிகவும் முக்கியமான தேவையென நோர்வேயின் முன்னாள் பிரதமர் பொண்டவிக் தெரிவித்தார்.

ஒஸ்லோவில் நடைபெற்ற விசேட கலந்துரையாடல் ஒன்றின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

இலங்கையின் சமாதான முன்னெடுப்புகளுக்கு பல தடைகள் ஏற்பட்டுள்ளது. பல மாதங்களுக்கு முன்னர் எதிர்பார்ப்புடன் இருந்துள்ளேன்.

இலங்கை அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் போர்நிறுத்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட போது திருப்தி அடைந்திருந்த போதும் - தற்போது ஏற்பட்டிருக்கின்ற சூழல் திருப்தி அளிக்கக்கூடிய நிலையில் இல்லையெனக் கருதுகிறேன்.

சமாதானத்தை நிலைநாட்டுவதில் பல சவால்களை எதிர்நோக்கியுள்ள அதேவேளை - போர்நிறுத்த உடன்படிக்கையை இரு தரப்பினரும் மதித்து செயற்படுவதன் மூலம் மீண்டும் இரண்டு தரப்பினரும் சமாதான முயற்சிகளுக்குத் திரும்ப வேண்டும்.

இதேவேளை - இலங்கைத் தீவில் சமாதானம் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதே அனைத்துத் தரப்பினரதும் நோக்கமாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# ஜோசப் எம்.பி கொலையாளிகள் இன்னும் கண்டுபிடிக்கப்படாதது ஏன்?

## சர்வதேச நாடாளுமன்ற கூட்டமைப்பு கேள்வி

கொழும்பு —

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்டுப் பல மாதங்களாகிவிட்டபோதும் - இன்னமும் ஏன் கொலையாளிகளை இலங்கை அரசு கண்டறியவில்லை என்று சர்வதேச நாடுகளின் நாடாளுமன்ற கூட்டமைப்பு கேள்வி எழுப்பியுள்ளது.

உலகிலுள்ள நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பிரதிநிதித்துவத்தைக் கொண்டு ஜெனீவாவில் இயங்கும் சர்வதேச நாடுகளின் நாடாளுமன்றக் கூட்டமைப்பு பரராஜசிங்கத்தின் படுகொலையை தமது 178 ஆவது கூட்டத் தொடரில் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இந்தக் கண்டனத் தீர்மானம் பற்றிய அறிக்கையை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு சர்வதேச நாடுகளின் நாடாளுமன்ற கூட்டமைப்பின் செயலாளர் நாயகம் அனுப்பிவைத்துள்ளார்.

இந்தப் படுகொலை தொடர்பான விடயங்களை உடனடியாகக் கவனத்தில் எடுத்து விசாரணையை மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.


அந்தக் கண்டன அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலையானது அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் படையினர் புடைசூழ இருந்தபோது 300 பேர் முன்னிலையில் நிகழ்ந்துள்ளது.

இந்தச் சூழ்நிலையில் படுகொலையை நடத்திய கொலையாளி எதுவித தடைகளும் இன்றித் தப்பிச் சென்றுள்ளது எமக்கு மிக அதிர்ச்சியைத் தருகிறது.

மேலும் படுகொலை நடந்து பல மாதங்களாகியும் பரராஜசிங்கத்தின் படுகொலையை ஒழுங்கான முறையில் விசாரித்து கொலையாளிகளைக் கண்டுபிடிக்காதது இலங்கையில் 'அரசு மன்னிப்புடன்' கொலைகள் நடைபெறுகின்றது என்ற நீண்டநாள் குற்றச்சாட்டைத் தெளிவாக்குவது போல் உள்ளது என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# போர்நிறுத்தத்துக்கு அமைவாக அரசாங்கம் செயற்படும்!



## மங்கள சமரவீர தெரிவிப்பு

கொழும்பு —

விடுதலைப் புலிகளுடன் கைச்சாத்திடப்பட்ட போர்நிறுத்த உடன்படிக்கைக்கு அமைவாக அரசாங்கம் தொடர்ந்தும் செயற்படும் என வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

ஒஸ்லோவில் நோர்வே வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்த பின்னர் அங்கு நடத்திய ஊடகவியலாளர்கள் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் -

இலங்கைத்தீவில் ஏற்பட்டுள்ள இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வு காண்பதே அரசாங்கத்தின் முக்கிய நோக்கமாகும்.

கௌரவமான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு நோர்வே அரசாங்கத்தின் ஒத்துழைப்புத் தொடர்ந்து கிடைக்க வேண்டும் என எதிர்பார்க்கிறோம்.

சமாதான முன்னெடுப்புக்கான செயற்பாடுகளை அரசாங்கம் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்படுத்தி வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# இராஜதந்திரக் கிளைமோரை நோர்வே வைத்துவிட்டதாம்!



## ஜாதிக ஹெல உறுமய குற்றச்சாட்டு

கொழும்பு —

நோர்வேயின் தலையீட்டுடன் புலிகளால் விரிக்கப்பட்ட வலையில் அரசாங்கம் முட்டாள்தனமாகச் சிக்கிக் கொண்டது.

ஒஸ்லோவில் நடைபெறவிருந்த சந்திப்பு அரசாங்கத்துக்கு எதிராக புலிகளுடன் இணைந்து நோர்வே சர்வதேச மட்டத்தில் வைத்த இராஜதந்திர கிளைமோர் குண்டு என்பதை அரசாங்கம் விளங்கிக் கொள்ள வேண்டும் என ஜாதிகஹெல உறுமய தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளர் ஓமல்பே சோபித தேரர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

ஒஸ்லோவில் நடைபெறவிருந்த பேச்சுவார்த்தை முறிவடைந்தமைக்கான முழுப்பொறுப்பையும் நோர்வே ஏற்றுக் கொள்ள வேண்டும். பேச்சில் கலந்து கொள்ளாமைக்குப் புலிகள் முன்வைக்கும் காரணங்களை ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனெனில் ஒஸ்லோ பேச்சுவார்த்தையில் பங்குபற்றுகின்ற அரசாங்க தரப்பு பிரதிநிதிகளின் பெயர் விபரங்கள் ஏற்கனவே நோர்வேக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

அரச தரப்பில் அமைச்சர்களை இணைத்துக் கொள்ளவேண்டும் என்று புலிகள் கூறியதாக நோர்வே அரசாங்கத்துக்கு தெரியப்படுத்தவில்லை. இந்த நிலையில் இந்தப் பேச்சிலிருந்து இறுதிச் சந்தர்ப்பத்தில் புலிகள் விலகிக் கொண்டமை சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. ஒஸ்லோ பேச்சிலிருந்து புலிகள் விலகிக் கொள்வார்கள் என்று நோர்வேக்கு ஏற்கனவே தெரிந்திருக்கக் கூடும் என்று எண்ணத் தோன்றுகின்றது.

போர்நிறுத்த உடன்படிக்கையை புலிகளே தொடர்ச்சியாக மீறி வருகின்றனர். இந்தநிலையில் போர்நிறுத்த உடன்படிக்கை மற்றும் கண்காணிப்பு தொடர்பான பேச்சுவார்த்தையை நோர்வே கிளிநொச்சியிலேயே நடத்தியிருக்கலாம்.

ஆனால், அரசாங்கத்தை சர்வதேச ரீதியில் சிக்க வைப்பதற்காகவே நோர்வே இந்தப் பேச்சுவார்த்தையை ஒஸ்லோவில் நடத்தத் திட்டமிட்டிருந்தது. இந்த விடயம் குறித்து அரசாங்கத்துக்குப் பல முறை எடுத்துரைத்திருந்தோம். போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் எதிர்நோக்கும் பிரச்சினை குறித்து நடத்தப்படவிருந்த பேச்சுவார்த்தையில் அரசாங்கத் தரப்பினர் பங்குபற்ற வேண்டிய அவசியம் இல்லையென்பதையும் தெளிவாக எடுத்துக் கூறியிருந்தோம்.

ஜனநாயக ரீதியான அரசாங்கம் இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள இயலாது என்று நேரடியாக அறிவிப்பதற்கான பல காரணங்கள் இருந்த போதும் அரசாங்கம் பேச்சில் கலந்து கொள்வதற்கு முனைப்புடன் செயற்பட்டது.

இலங்கையின் இறைமைக்கு பங்கம் ஏற்படுத்தி புலிகள் விரித்த வலையில் அரசாங்கத்தை சிக்க வைப்பதற்காகவே நோர்வே முயற்சி செய்து வருகிறது என்பதை தொடர்ச்சியாக அரசாங்கத்துக்குத் தெளிவுபடுத்தியிருந்தோம். நோர்வேயின் உச்சக்கட்ட ஆதரவுடனேயே புலிகள் பேச்சில் பங்குபற்றுவதற்கு மறுப்புத் தெரிவித்திருப்பது தெட்டத் தெளிவாகிறது. இந்தப் பேச்சில் பங்குபற்றவிருந்த சுவீடன், டென்மார்க், பின்லாந்து போன்ற நாடுகளைச் சேர்ந்த கண்காணிப்பாளர்களை விலக்கிக் கொள்வதனூடாக கண்காணிப்பாளர்களின் செயற்பாட்டை தனது கண்காணிப்பின் கீழ் கொண்டு வருவதற்கு நோர்வே முயற்சி செய்திருக்கலாம்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் அரசாங்கம் புலிகளுக்கு பின்னால் செல்லாது, இலங்கையின் இறைமையை பாதுகாப்பதற்கும் நாட்டின் கௌரவத்துக்கு இழுக்கு ஏற்படாத வகையிலும் செயல்பட வேண்டும். அரசாங்கம் புலிகளுக்குப் பின்னால் செல்வதை விடவும் புலிகளின் ஆயுதங்களை கீழே வைப்பதற்கான அழுத்தங்களைக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

சமாதான முன்னெடுப்புத் தொடர்பாக சர்வதேச சமூகம் அரசாங்கத்தின் மீது அழுத்தங்களைக் கொடுப்பதை விடவும் புலிகள் ஆயுதங்களை கீழே வைப்பதற்கான சர்வதேச சமூகத்தினூடாக அழுத்தங்களைக் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 81 அகதிகள் தமிழகம் சென்றனர்!

சென்னை —

இலங்கையிலிருந்து மேலும் 81 அகதிகள் தமிழகத்தைச் சென்றடைந்தனர். கடந்த திங்கட்கிழமை காலை இவர்கள் இராமேஸ்வரம், மண்டபம் பகுதிகளுக்குச் சென்றடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

3 குழுக்களாக - 16 பெண்கள், 11 சிறுவர்கள் உள்ளிட்ட 59 பேர் மண்டபத்துக்குச் சென்றனர். இவர்கள் வவுனியா, யாழ்ப்பாணம் நிலாவெளிப் பகுதியைச் சேர்ந்தவர்கள்.

மேலும் இரு குழுக்களாக 23 பேர் நேற்றுமுன்தினம் பிற்பகல் அரிச்சல்முனையைச் சென்றடைந்ததாகத் தெரியவருகிறது.

# மாவட்டங்கள் தோறும் ஜே.வி.பி ஆர்ப்பாட்டப் பேரணிக்கு ஏற்பாடு

கொழும்பு —

நாட்டின் இன்றைய ஆபத்தான நிலைமை குறித்து நாடெங்கும் 18 இடங்களில் பேரணிகளை நடத்த ஜே.வி.பி முடிவு செய்துள்ளது.

இதுகுறித்து ஜே.வி.பி பேச்சாளர் பிரசன்ன அதிகாரி நேற்று செய்தியாளர் மத்தியில் கூறியதாவது:-

ஜே.வி.பி.யின் மத்திய குழுக் கூட்டத்தில் நாட்டின் இன்றைய ஆபத்தான நிலைமைகள் குறித்து மக்களுக்குத் தெரிவிப்பதற்கான பேரணிகளை நடத்த முடிவு செய்யப்பட்டது.

அதனடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் இத்தகைய பேரணிகள் நடத்தப்படும். மொத்தம் 18 பேரணிகள் நடைபெறவுள்ளன.

முதலாவது பேரணி எதிர்வரும் திங்கட்கிழமை தங்காலை நகரசபை அரங்கில் நடைபெறும். இதில் கட்சியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச பங்கேற்பார்.

ஜே.வி.பியின் பொதுச் செயலர் ரில்வின் சில்வா, நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸநாயக்க ஆகியோரும் பேரணிகளில் பங்கேற்கின்றனர்.

நாட்டின் உள்விவகாரங்களில் தலையிட்டு சர்வதேச சமூகம் இலங்கைக்கு அழுத்தம் கொடுத்து வருகிறது.

அந்நியப் படைகளை இங்கே நிறுத்தப் போவதாக ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷி கூறி வருகிறார்.

இந்தநிலையில், இலங்கையைச் சேர்ந்த நாங்கள் அமைதியாக இருக்கமுடியாது. நாட்டின் இந்த நிலைமை குறித்து மக்களிடம் விளக்கி இத்தகைய செயற்பாடுகளைத் தடுக்க முடிவு செய்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# இனப்பிரச்சினை தீர்வுக்கு 12 பேர் கொண்ட குழு!

கொழும்பு —


இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண 12 பேர் கொண்ட குழுவை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

கடந்த ஜுன் 2 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட முடிவின்படி இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இந்தக் குழுவினர் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் புதிய வரைபை உருவாக்குவர்.

இந்தக் குழுவில் எச்.எல்.டி.சில்வா, பைஸல் முஸ்தபா, ஆர்.கே.டபிள்யூ. குணசேகர, கோமின் தயாசிறி, சிவாஜி பீலிக்ஸ், திருமதி டி.ஆர்.பெரேரா, ஜயம்பதி விக்கிரமரட்ண, கே.எச்.ஜே. விஜயதாஸ, தர்மசிறி பீரிஸ், திருமதி மால்கந்தி விக்கிரமசிங்க ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

# ஈழத்தமிழர் ஆதரவு ஆர்ப்பாட்டத்தில்

# பெருந்திரளாகப் பங்கேற்குமாறு கட்சியினருக்கு வைகோ அழைப்பு



புதுடெல்கி

தமிழ்நாடு முழுவதும் ஈழத் தமிழர்களுக்காக நாளை நடத்தப்படவுள்ள ஆர்பாட்டத்தில் பெருந்திரளா கப் பங்கேற்க வருமாறு கட்சித் தொண்டர்களுக்கு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் -

இலங்கைத் தமிழர்கள் விபரிக்க இயலாத துன்ப துயரத்துக்கு ஆளாகி உள்ளனர். சிங்கள அரசு அறிவிக்கப்படாத ஒரு யுத்தத்தைத் தமிழர்கள் மீது நடத்தி வருகிறது. தமிழர் வாழும் பகுதிகளில் நாள்தோறும் தமிழ் இளைஞர்களும், தாய்மார்களும், குழந்தைகளும் கொல்லப்படுகின்றனர்.

தமிழர் பகுதிகளில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பல்லாயிரக் கணக்கில் சிங்கள இராணுவம் குவிக்கப்பட்டு உள்ளது. யாழ்ப்பாணத்தில் கோப்பாயில் சிங்கள இராணுவத்தால் கொடூரமாகக் கொல்லப்பட்ட அப்பாவித் தமிழர்களின் சடலங்கள் புதைக்கப்பட்டது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

அந்தப் புதைகுழிகளில் இருந்து அழுகிப்போன சடலங்களும், எலும்புக் கூடுகளும் தோண்டி எடுக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் தாங்கள் செய்யும் கொடுமைகளை மூடி மறைத்துவிட்டு, சமாதானப் பாதைக்குத் தயாராக இருப்பதாக சிங்கள அரசு சர்வதேச நாடுகளை ஏமாற்ற வெளிவேடம் போடுகிறது.

இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை இன்னொரு நாட்டின் உள்நாட்டுப் பிரச்சினை என்று இந்தியா கைகழுவக்கூடாது - முடியாது.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இந்தியாவிலுள்ள தமிழர்களோடு தொப்புள்கொடி உறவு கொண்டுள்ள இலங்கைத் தமிழர்கள் வதைபடுவதை ஆயிரக்கணக்கான அகதிகள் இந்தியாவுக்கு வரும் நிலையில், இந்திய அரசு இலங்கையில் சிங்கள அரசுக்குச் சார்பு நிலையை மேற்கொள்வது போன்ற ஒரு தோற்றத்தை இலங்கை அரசு தந்திரமாக ஏற்படுத்துகிறது.

இலங்கையிலுள்ள உண்மை நிலையை, இலங்கைத் தமிழர்கள் படும் துன்பங்களை, தமிழ் மக்களுடைய உணர்வுகளை நேரடியாக விருப்பு, வெறுப்பு இன்றிக் கண்டு அறிவதற்கு இந்தியாவிலிருந்து அனைத்துக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு அனுப்பப்பட வேண்டும் என்ற கோரிகையை யையும், அதுபோல இலங்கையில் தமிழ் மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு இந்தியா வருவதற்கும் இந்தியாவில் பிரதமரையும் மத்திய அரசின் பிரதிநிதிகளையும் சந்திப்பதற்கும் உடனடியாக வாய்ப்பு அளிக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் வலியுறுத்தி, அரசியல் கட்சிகளும், தமிழ் அமைப்புகளும் நாளை மாலை 4 மணிக்கு தமிழகமெங்கும் மாவட்ட தலைநகரங்களில் ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளன.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ம.தி.மு.க பங்கேற்கிறது. மதுரையில் நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் நான் கலந்து கொள்கிறேன்.

அந்தந்த மாவட்டத் தலைநகரங்களில் மாவட்ட செயலாளர்களும் கழக முன்னணியினரும் பங்கேற்கிறார்கள். ம.தி.மு.கழகத் தோழர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் பெரும் அளவில் கலந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## டிசம்பர் முதல் ஜுன் வரை 102 கிளைமோர் தாக்குதல்

### பாதுகாப்பு அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு

கடந்த டிசம்பர் மாதம் முதல் ஜுன் மாதம் வரை மொத்தம் 102 கிளைமோர் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாகப் பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது -

இறுதியாக நடைபெற்ற சமாதானப் பேச்சுகளின் பின்னர் மொத்தம் 614 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இராணுவத் தரப்பில் 73 பேரும் பொதுமக்கள் 106 பேரும் கொல்லப் பட்டுள்ளனர். கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 18 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர்.

டிசம்பர் மாதம் முதல் இதுவரையில் மொத்தம் 241 இராணுவத்தினரும், 152 பொதுமக்களும் கொல்லப்பட்டுள்ளனர். இந்தக் காலகட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பில் 42 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் டிசம்பர் முதல் 102 கிளைமோர் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இவற்றில் ஜெனிவா பேச்சுகளுக்குப் பின்னர் 62 கிளைமோர் தாக்குதல்கள் நடந்துள்ளன என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாகிஸ்தான் மறுப்பு

கொழும்பு

இலங்கை அரசாங்கம் இராணுவத் தளபாடங்களை வாங்குவதற்குப் பாகிஸ்தான் உதவுவதாக வெளியான செய்திகளை பாகிஸ்தான் மறுத்துள்ளது.

இராணுவத் தளபாடங்கள் கொள்வனவுக்காக 250 மில்லியன் டொலர் கடனுதவியைப் பாகிஸ்தான் வழங்கவுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. இலங்கைக்கான பாகிஸ்தான் தூதரகப் பேச்சாளர் சூரிய ஜமால் இது தொடர்பாக கூறுகையில் -

இந்தச் செய்தியில் எந்தவித உண்மையும் இல்லை. பாகிஸ்தானிய தகவல் திணைக்களத்திடம் விபரம் கேட்டுள்ளோம். ஊடகச் செய்திகள் ஆதாரமற்றவை எனத் தெரிவித்தார்.

## அரசியலமைப்புச் சபைக்கு

# சிறுபான்மைக் கட்சிகளின் சார்பில் றொஹான் எதிரிசிங்க பிரேரிப்பு!

கொழும்பு

அரசியலமைப்புச் சபையின் சிறுபான்மைக் கட்சிகளின் பிரதிநிதியாக கொழும்பு பல்கலைக் கழகத்தின் சட்டப்பீட பேராசிரியர் றொஹான் எதிரிசிங்கவை நியமிப்பதற்கு நாடாளுமன்ற சிறுபான்மை அரசியல் கட்சிகள் தீர்மானித்துள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் மலையக மக்கள் முன்னணி ஆகியன ஒன்றிணைந்து இந்தத் தீர்மானத்தை எடுத்திருப்பதனூடாக அரசியலமைப்புச் சபைக்கு உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பாக எழுந்த நெருக்கடி நிலை தீருமென நம்பப்படுகிறது.

அரசயலமைப்புச் சபையின் வெற்றிடத்துக்கென றொஹான் எதிரிசிங்கவை நியமிக்குமாறு கோரி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன் ஆகியோரின் கையெழுத்துடனான கடிதம் ஜனாதிபதி மகிந்தவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

ஆனால், இந்த நியமனத்தை நிராகரிக்க வேண்டும் என்று ஜே.வி.பி தொடர்ந்து வலியுறுத்துகிறது.

இது தொடர்பாக ஜே.வி.பியின் நாடாளுமன்ற குழுத் தலைவர் விமல் வீரவன்ச கூறியதாவது -

றொஹான் எதிரிசிங்கவை நியமிக்கும் முடிவை நாங்கள் எதிர்ப்போம். மகிந்த ராஜபக்ஷவிடம் எமது எதிர்ப்பைப் பதிவு செய்வோம். எதிரிசிங்கவை ஜனாதிபதி மகிந்த நியமிக்கமாட்டார் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது.

றொஹான் எதிரிசிங்க தமிழ்த் தேசியக் கூட்டமைபைச் சேர்ந்தவர். அவர்களது நிலைப்பாடு என்ன என்பது அனைவருக்கும் தெரியும்.

விடுதலைப் புலிகளின் நிழல் பிரதிநிதிகளின் வலையில் மகிந்த விழமாட்டார். றொஹான் எதிரிசிங்க மற்றும் ஜயதேவ உயங்கொட இருவரையுமே அரசியல் யாப்பு சபையில் இணைக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னர் முயற்சித்தது.

நாடாளுமன்றில் எமக்கு 38 உறுப்பினர்கள் உள்ளனர். இதை ஆளும் கூட்டமைப்பு மறந்துவிடக் கூடாது எனத் தெரிவித்தார்.

இந்த நிலையில் றொஹான் எதிரிசிங்கவின் நியமனத்துக்கு ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவு தெரிவித்துள்ளது.

அந்தக் கட்சியின் பேச்சாளர் ஒருவர் கூறுகையில் - அரசியலமைப் புச் சபையை முடக்கும் எதுவித முயற்சிக்கும் மகிந்த அனுமதிக்கக் கூடாது எனத் தெரிவித்தார்.

## அதிகாரப் பகிர்வுக்குழு

# பிரதிநிதியை நியமிப்பதற்கு ஐ.தே.க நிபந்தனை விதிப்பு

கொழும்பு

ஒஸ்லோவில் விடுதலைப் புலிகள் வெளியிட்டிருக்கும் அறிக்கை மற்றும் ரோக்கியோ இணைத் தலைமை நாடுகள் தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாடு முதலில் தெரிவிக்கப்பட்டால் மட்டுமே இனப் பிரச்சினைக்கான அதிகாரப் பகிர்வு தொடர்பான குழுவுக்கு பிரதிநிதியை பரிந்துரைக்க முடியுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஐக்கிய தேசியக் கட்சி நிபந்தனை விதித்துள்ளது.

கொழும்பில் நடைபெற்ற சர்வகட்சிக் கூட்டத்தில் அதிகாரப் பகிர்வுக்கான வரைபை உருவாக்க சர்வ கட்சிகளின் சார்பில் குழுவொன்று அமைக்க முடிவு செய்யப்பட்டது.

இதையடுத்து அனைத்துக் கட்சிகளும் தங்களது கட்சிப் பிரதிநிதியின் பெயரை பரிந்துரைக்குமாறு வேண்டுகோள் விடுத்து அரச சமாதான செயலகப்பணிப்பாளர் பாலித கொகன்ன கடிதம் அனுப்பியிருந்தார்.

மேலும் சர்வகட்சி குழுவுக்கான ஆலோசனைக் குழுவையும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிவித்திருந்தார்.

இந்த நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியினர் ஜனாதிபதி மகிந்த நியமிக்கும் குழுவில் இடம்பெறப் போவதில்லை என்று முடிவு செய்துள்ளனர்.

அரசாங்கத்தினது நிலைப்பாடுகள் தெளிவுபடுத்தப்பட்டால், அதிகாரப் பகிர்வு தொடர்பான எந்த ஒரு ஆலோசனைக் கூட்டத்திலும் தாங்கள் பங்கேற்போம் என்றும் ஜனாதிபதி மகிந்தவுக்கு ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கூறுகையில் -

பல சுற்று சர்வகட்சிக் கூட்டம் நடத்தப்பட்ட நிலையிலும் அமைதிப் பேச்சுக்கள் தொடர்பாக ஒரு சிறு முன்னேற்றம் கூட ஏற்படவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகளைப் பேச்சுக்களுக்குக் கொண்டு வருவதற்கான உத்தியை உருவாக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண அரசாங்கம் தெளிவான ஒரு நிலைப்பாட்டை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

மனோகரா
யாழ்ப்பாணம்
புதிய வெளியிடாக
ஜீவன், சோனியா அகர்வால், விவேக், அப்பாஸ், மாளவிகா மற்றும் பலர் நடித்த
திருட்டு பயலே
காட்சி நேரம் 10.30,2.30,6.30,9.30

ராஜா யாழ்ப்பாணம்
பரத், பத்மபிரியா ஆரியா மற்றும் பலர் நடித்த



பட்டியல்
(புதிய வெளியீடு)
காட்சி நேரம் : 10.30, 2.15, 5.30

நிறைஞ்சனாஸ் சங்கானை
சூரியா, அசின், பிரகாஷ்ராஜ் நடித்த
கஜினி
காட்சி நேரம் : 10.30, 2.15, 5.30

# தமிழர் மீதான படுகொலைகளுக்கு ராஜபக்ஷ சகோதரர்களே பொறுப்பு

## தமிழர் மனிதர் உரிமைகள் மையம் குற்றச்சாட்டு

கொழும்பு

இலங்கையில் தமிழர்கள் - ராஜபக்ஷ சகோதரர்களால்தான் படுகொலை செய்யப்படுகின்றனர் என்று தமிழர் மனிதர் உரிமைகள் மையம் குற்றம் சாட்டியுள்ளது.

இது தொடர்பாக பிரான்ஸை தலைமையிடமாகக் கொண்டு செயற்படும் தமிழர் மனித உரிமைகள் மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

வடக்கு - கிழக்கில் நடைபெறும் அப்பாவி மக்களின் படுகொலைகள் அனைத்துமே - தமிழ் மக்களை அச்சம் கொள்ளச் செய்யும் நோக்குடனேயே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அவரது சகோதரரான பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரது உத்தரவிலேயே நடைபெறுகின்றன.

இந்தப் படுகொலைகளை மேற்கொள்ளும் படையினருடன் சேர்ந்தியங்கும் துணை ஆயுதக் குழுவினருக்கு ஊதியப் பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட்டு, இதன் அடிப்படையிலேயே ஊதியம் வழங்கப்படுகிறது.

பாதுகாப்பு அமைச்சினால் இந்தப் பட்டியில் தயாரிக்கப்பட்டுள்ளது.

கைக்குண்டுத் தாக்குதல் நடத்துவோருக்கு 15 ஆயிரம் ரூபாய், கிளைமோர்த் தாக்குதல் நடத்துவோருக்கு 20 ஆயிரம் ரூபாய், தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவாக முன்னின்று உழைப்போரை படுகொலை செய்வோருக்கு ஒரு லட்சம் ரூபாய் என வழங்கப்படுகிறது.

அரச படைகள் மன்னிப்புடன் தாம் விரும்பியவர்களை வடக்கு - கிழக்கில் கொலை செய்யவும், பாலியல் வன்முறையில் ஈடுபடுத்தவும் ராஜபக்ஷ சகோதரர்களினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தற்போதைய பாதுகாப்பு படைகளின் பிரதம அதிகாரிகளாகவும் பாதுகாப்பு முடிவுகளை மேற்கொள்பவர்களாகவும் தென்பகுதியை சேர்ந்த ராஜபக்ஷ சகோதரர்களும், அவர்களது முன்னாள் பாடசாலை தோழர்களும், நண்பர்களும், உறவினர்களுமே உள்ளனர் என்று அந்த அறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.




யாழ். நகரப் பகுதியின் ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள மின்னியல் சாதனப் பொருட்கள் விற்பனை நிலையமொன்று நேற்றுமுன்தினம் இரவு மின்ஒழுக்கு காரணமாக முற்றாக எரிந்து நாசமாகியதுடன் நிலையத்திலிருந்த பல லட்சம் ரூபா பெறுமதியான மின் உபகரணங்களும் நாசமாகியுள்ளமையைப் படங்களில் காணலாம்.

## சிறுதானிய செய்கை பாரிய வீழ்ச்சி

மட்டுவில் —

இந்த வருடம் மழைவீழ்ச்சி குறைவடைந்ததன் காரணமாக சிறுதானியப் பயிர்ச் செய்கையில் எதிர்பார்த்த விளைவைப் பெற்றுக்கொள்ள முடியவில்லையென விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

பன்றிகளின் தொல்லை, எரிபொருள் விலையேற்றம் போன்ற பல்வேறு காரணங்களால் மட்டுவில், சரசாலை, கல்வயல், விளைவேலிப் பகுதி விவசாயிகள் தோட்டப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதைக் குறைத்து பயறு, உழுந்து, கௌபி போன்ற சிறுதானியப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டனர்.

ஆனாலும் மழை வீழ்ச்சி குறைவு காரணமாக கடந்த வருடத்தை விட இந்த வருடம் பாரிய வீழ்ச்சி கண்டுள்ளமை குறித்தே அவர்கள் கவலை தெரிவித்தனர். (24)

# வடக்கு - தெற்கு நட்புறவு சந்திப்பை பத்திரிகையாளர் சங்கம் புறக்கணிப்பு

யாழ்ப்பாணம் —

யாழ். குடாநாட்டில் மீண்டும் அதிகரித்து வரும் நெருக்குவாரங்கள் ஒட்டுமொத்த ஊடக சுதந்திரத்தையும் முடக்கி விடுவதாக பரிணாமம் பெற்று வரும் இந்த வேளையில், எதிர்வரும் 21, 22 ஆம் திகதிகளில் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வடக்கு - தெற்கு ஊடகவியலாளர் நட்புறவுச் சந்திப்பைப் புறக்கணிப்பதென முடிவு செய்துள்ளதாக வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

குடாநாட்டில் மீண்டும் அதிகரித்து வரும் நெருக்குவாரங்கள் ஒட்டுமொத்த ஊடக சுதந்திரத்தையும் முடக்கி விடுவதாக பரிணாமம் பெற்று வருகிறது. அதன் ஓர் உச்சக்கட்டமாகவே அண்மைய உதயன் பணிமனை மீதான தாக்குதலும், அப்பாவிப் பணியாளர்களிருவர் மீதான படுகொலையும் அமைந்துள்ளது.

மாறி மாறி ஆட்சியிலிருக்கும் ஆயுத முனைகளின் மத்தியிலேயே குடாநாட்டில் ஊடக சுதந்திரம் தன்னைத் தக்க வைத்துக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் படுகொலையும், அதன் பரிணாமமாக உதயன் பணியாளர்கள் இருவரினது கொலையும் ஊடக சுதந்திரத்துக்கான வேட்டுகளே.

ஏற்கனவே இடம்பெற்ற நமது ஈழநாடு மற்றும் யாழ். தினக்குரல் அலுவலக தேடுதல்கள் அச்சமூட்டும் ஆயுததாரிகளின் பிரசன்னங்கள் வெவ்வேறான சந்தர்ப்பங்களில் குடாநாட்டு ஊடகவியலாளர் மீதான கடமையின் போதான தாக்குதல்கள், பத்திரிகை விநியோகஸ்தர்கள் கொலையென குடாநாட்டில் ஊடகப் பணி பெரும் அச்சுறுத்தலுக்கு தொடர்ந்தும் உள்ளாகி வருகின்றது.

தொடரும் அவலங்கள் தொடர்பாக சர்வதேசத்திடமும், அரசிடமும் ஊடக அமைப்புகள் உள்ளிட்ட உரிய தரப்புகளிடமும் எல்லாவற்றுக்கும் மேலாக தென்னிலங்கை சக ஊடகவியலாளர்களிடமும் தொடர்ந்தும் எடுத்துக் கூறி வருகிறோம். எழுத்து மற்றும் கருத்து வெளியிடுவதற்காக அவர்களுக்கு உள்ள சுதந்திரத்தை விட மேலதிகமாக தாம் எதையும் கோரியிருக்கவுமில்லை.

ஆனாலும், இவை அனைத்துமே செவிடன் காதில் ஊதிய சங்குபோன்றே இருக்கிறது. தொடரும் ஊடக அடக்குமுறைகள் மற்றும் அச்சுறுத்தல்களால் கடந்த ஆறுமாத காலப்பகுதியினுள் மட்டும் இதுவரை குடாநாட்டைச் சேர்ந்த நான்கு பத்திரிகையாளர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். மேலும் சிலர் அவ்வாறு வெளியேற முற்பட்டுள்ளனர். பலர் சுதந்திரமாக நடமாட முடியாது முடக்கப்பட்டுள்ளனர்.

எந்த வேளையில் எதுவும் நடக்கலாமென்ற அச்சத்துடனேயே குடாநாட்டு ஊடகவியலாளர்களின் வாழ்வு தொடர்கிறது.

இத்தகையதோர் சூழலில் எதிர்வரும் 21, 22 ஆம் திகதிகளில் கொழும்பில் வடக்கு - தெற்கு ஊடகவியலார் நட்புறவுச் சந்திப்பொன்றுக்காக விடுக்கப்பட்டுள்ள அழைப்பை - யாழ். மாவட்ட ஊடகவியலாளர்களான நாம் புறக்கணிப்பதென முடிவு செய்துள்ளோம். எமது அபிலாஷைகள் மற்றும் எதிர்பார்ப்புகள் தொடர்பாக பல தடவைகள் எடுத்துக் கூறியும், எந்தவொரு முடிவும் இல்லாத நிலையில் வெறும் களியாட்டமாக இந்த நிகழ்வுகளில் பங்கெடுக்க நாம் விரும்பவில்லை.

ஆனாலும் உண்மைகளைக் கண்டறியும் நோக்கில் இங்கு வரவிரும்பும் தென்னிலங்கை ஊடகவியலாளர்களை வரவேற்க நாம் என்றும் தயாராக உள்ளோம் என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

அதேவேளை, உன்னதமான அர்ப்பணிப்புகளுடன் செயற்பட்டுக் கொண்டிருக்கும் குடாநாட்டு ஊடகவியலாளர்களது முகவர்கள் போன்று செயற்படும் மூன்றாம்தர தரகு வேலைகளில் ஈடுபட்டு, அவர்களது அர்ப்பணிப்புகளை கொச்சைப்படுத்தவேண்டாமென யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி மையத்தினரை இந்தவேளையில் கேட்டுக்கொள்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாடசாலைகள் 8 மணிக்கு ஆரம்பம்

யாழ்ப்பாணம் —

புதிய நிர்வாக நேர அட்டவணையின்படி யாழ். மாவட்டப் பாடசாலைகள் காலை 8 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளதாக யாழ். வலயக் கல்வித் திணைக்கள தகவல்கள் தெரிவித்தன.

இதுவரை காலமும் குடாநாட்டுப் பாடசாலைகள் 8.15 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு பிற்பகல் 2.15 மணிக்கு முடிவடைந்தது. தற்போது புதிய நிர்வாக நேர அட்டவணையின் படி வேறு பிரதேசங்களில் காலை 7.30 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ள போதிலும் யாழ்.மாவட்டத்தில் மாணவர்களின் நலனைக் கருத்திற் கொண்டு 8.00 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளன.

## பாசையூரில் பயிற்சி

கொக்குவில் —

யாழ்.கடலோட்டு மற்றும் இயந்திரவியல் கல்லூரியில் நேற்று தொடக்கம் நான்கு தினங்கள் பயிற்சி நடைபெறவுள்ளதாக உதவிப் பணிப்பாளர் இ.செபஸ்தியாம்பிள்ளை தெரிவித்தார்.

தெரிவு செய்யப்பட்ட பதினைந்து பேருக்கு பாசையூரில் இந்தப் பயிற்சி நெறி இலவசமாக வழங்கப்பட இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பயிற்சிநெறிகளில் கலந்து கொள்வோருக்கு முடிவில் கல்லூரியால் சான்றிதழ் வழங்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது. (206)

# இடம்பெயர்ந்த மக்களுக்கு தொழில் உபகரணங்கள் வழங்கல்

யாழ்ப்பாணம் —

இடம்பெயர்ந்து முகாம்களில் இருக்கும் குடும்பங்களுக்கு மனிதநேய அமைப்புகள் ஒன்றியம் தொழில்சார் உபகரணங்களை வழங்கியுள்ளது.

கடந்த காலங்களில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களின் போது இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் 30 இடங்களில் இருக்கும் 350 குடும்பங்களுக்கு வாழ்வாதாரத் திட்டங்களுக்கான தொழில் உபகரணங்களை வழங்கியுள்ளதாக ஒன்றியத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் இ.பகீரதன் தெரிவித்தார்.

தச்சுத்தொழில், மேசன் தொழில், சீவல் மற்றும் தையல் தொழில், சைக்கிள் திருத்துதல், விவசாயம் போன்ற கைத்தொழில்களை மேற்கொள்வதற்கே உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் இடம் பெயர்ந்த மக்கள் 67 முகாம்களில் வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வெதுப்பகங்கள், சந்தைகளில் திடீர் சோதனைக்கு உத்தரவு

யாழ்ப்பாணம் —

யாழ்.மாநகர சபைக்குள் இயங்கும் வெதுப்பகங்கள் மற்றும் பொதுச் சந்தைகளில் திடீர் சோதனைகளை நடத்துமாறு யாழ்.மாநகர ஆணையாளர் சீ.வி.கே.சிவஞானம் சுகாதார வைத்திய அதிகாரிக்கு உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக மாநகர ஆணையாளர் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் இயங்கும் வெதுப்பகங்களில் உற்பத்தியாகும் பாண் முழுமையாக வேகாது, தரமற்று இருப்பதாகப் பல புகார்கள் கிடைக்கப்பெற்றுள்ளமையால் இரவு வேளைகளில் வெதுப்பகங்கள் மீது திடீர் சோதனைகளை மேற்கொள்வதுடன் -

பொதுச்சந்தைகளில் வியாபாரிகளால் பயன்படுத்தப்படும் தராசுப் படிகள் சீல் செய்யப்படாமலும், நிறை குறைவாகவும் இருப்பதை நேரில் அவதானித்ததன் காரணமாக திடீர் சோதனைகளை மேற்கொண்டு மரக் கறி மற்றும் மீன் வியாபாரிகளால் அன்றாடம் பாவிக்கப்படும் தராசுப் படிகளை பரிசீலித்து, முறையற்றவையாகக் காணப்படின் அவற்றைப் பறிமுதல் செய்யுமாறும் சுகாதார வைத்திய அதிகாரியூடாக சகல பொது சுகாதாரப் பரிசோதகர்களுக்கும் கடந்த 7 ஆம் திகதி என்னால் பணிப்புரை வழங்கப்பட்டது.

இதற்கமைய, வெதுப்பகங்களில் கூட்டுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், செங்குந்தா சந்தையில் மீன் விற்பனை நிறை தொடர்பாகவும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

அத்தோடு தராசுப்படி சம்பந்தமாக நிறுத்தல் அளவை திணைக்களத்துக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆங்கில ஆசிரியர் பயிற்சிநெறி மீண்டும் ஆரம்பிக்க அனுமதி

யாழ்ப்பாணம் —

பலாலி ஆசிரிய கலாசாலையில் ஆங்கில ஆசிரியர் பயிற்சி நெறியை மீண்டும் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

பலாலி ஆசிரியர் கலாசாலையில் ஆங்கில பயிற்சி நடைபெற்று வந்த போதும், கடந்த வருடம் ஏற்பட்ட இட நெருக்கடியால் இந்தப் பயிற்சிநெறி இடைநிறுத்தப்பட்டது.

பலாலி ஆசிரியர் கலாசாலையில் ஆங்கில பயிற்சிநெறி வழங்காமையால் தமிழ் பயிற்சி நெறி ஆசிரியர்கள் பேராதனை, மஹறகம ஆகிய கலாசாலைகளுக்குச் சென்று தமது பயிற்சிகளைப் பெறவேண்டி உள்ளதால் தாம் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக ஆசிரியர்கள் கவலை தெரிவித்தனர்.

இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக கலாசாலை அதிபர் - கல்வி அமைச்சின் ஆசிரியர் கல்விப் பிரிவின் கவனத்துக்கு கொண்டு வந்ததையடுத்து, இந்த வருடத்தில் இருந்து ஆங்கில ஆசிரியர் பயிற்சி நெறியை பலாலி ஆசிரிய கலாசாலையில் நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த வருடம் ஆங்கில ஆசிரியர் பயிற்சிநெறிக்கு பயிற்சி ஆசிரியர்களை அனுமதிப்பதற்காக, நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளதாக கலாசாலையின் அதிபர் தெரிவித்தார்.

# தொழில்நுட்பக் கல்லூரிகளில் மாணவர்களை ஆட்சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரல்

மானிப்பாய் —

தொழில்சார், தொழில் நுட்பப் பயிற்சி அமைச்சு - தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களத்தின் தொழில் நுட்பக் கல்லூரிகளில் நடத்தப்படும் கற்கைநெறிகளுக்கு 2006/07 ஆம் கல்வியாண்டுக்குப் புதிய மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

விண்ணப்பதாரிகளின் தகைமைகளுக்கும், திறமைகளுக்கும் அமைய கற்கைநெறிகளின் தேவைக்கேற்ப மாணவர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

தகுதியுடைய விண்ணப்பதாரிகள் - வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்துக்கு அமையத் தயாரித்துப் பூர்த்தி செய்த தமது விண்ணப்பங்களை - எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அவரவர், பிரதேச உயர் தொழில்நுட்பக் கல்லூரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பத்தை வைத்து அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் கற்கை நெறியின் பெயர் அதன் குறியீட்டு இலக்கம் என்பன குறிப்பிடுதல் வேண்டும்.

முழுநேரக் கற்கைநெறிகளைத் தொடரும் மாணவர்களுக்கு தமது குடும்ப பொருளாதார நிலைமைக்கேற்ப, கல்லூரி வகுப்புகளுக்குச் சமுகமளிக்கும் நாளொன்றுக்கு ரூபா 20 வீதம் உதவிக் கொடுப்பனவு வழங்கப்படும்.

முழுநேரக் கற்கை நெறியைத் தொடரும் குறைந்த வருமானத்தைப் பெறும் மாணவ, மாணவிகளில் 600 பேருக்கு ரூபா 2 ஆயிரத்து 500 ரூபா வீதம் வருடமொன்றுக்கு மாணவ உதவு தொகையாக வழங்கப்படும்.

யாழ்.குடாநாட்டு விண்ணப்பதாரிகள் - தமது விண்ணப்பங்களை யாழ்ப்பாணம் தொழிநுட்பக்கல்லூரி, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும்.

விண்ணப்பதாரிகள் - கற்கை நெறிகள், அதற்கான கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய முழுவிபரங்களையும் கடந்த 09 ஆம் திகதி வெளியான வர்த்தமானியில் பார்வையிடலாம். (100)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஒன்று



பெயர் : சி.தனோஜன்
முகவரி : அல்லைப்பிட்டி.

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :----------------------------
முகவரி :----------------------------
பிறந்த ஆண்டு:----------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------
பெற்றோர் ஒப்பம்

# புலிகளின் நிர்வாகப் பகுதிகளுக்கு மக்கள் தொடர்ந்தும் இடப்பெயர்வு

## நிசோர் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு —

இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதிக்கு மக்கள் தொடர்ந்து இடம்பெயர்ந்து கொண்டிருப்பதாக வடக்கு - கிழக்கு மாகாண மனித உரிமைகள் செயலகமான நிசோர் தெரிவித்துள்ளது.

நிசோர் அமைப்பின் தலைவர் கருணாரட்ணம்அடிகளார் இது தொடர்பாக கூறியுள்ளதாவது -

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு பொதுமக்கள் இடம்பெயர்ந்து வருகின்றனர். நிலைமை மோசமடைந்துள்ள போதிலும் பொது மக்கள் பலர் இடம்பெயராமல் உள்ளனர். தாங்கள் இடம் பெயரும் நிலைமையில் தங்களது காணிகளை இராணுவம் ஆக்கிரமித்துக் கொள்ளக்கூடும் என்று பொதுமக்கள் அஞ்சுகின்றனர்.

அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதிகளில் எமது நிசோர் பணியாளர்கள் கடமையாற்றுவதற்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

கோப்பாய் கிராம சேவகர் ஜோசப் இரத்தினராஜாவுக்கு என்ன நடந்தது என்பதை நாம் அனைவரும் அறிவோம். அவர் சடலங்களைப் பெற்று வந்தார். தற்போது அவரே சுடப்பட்டுள்ளார்.

வன்னிப்பகுதியில் அண்மையில் கிளைமோர் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளமை குறித்து பொதுமக்கள் அச்சமடையத் தேவையில்லை. பொதுமக்கள் இத்தகைய தாக்குதல்களுக்கு முகம் கொடுக்கும் வகையிலான தற்காப்பு பயிற்சிகளைப் பெற்று வருகின்றனர். அவர்கள் காட்டுப் பகுதிகளுக்குச் சென்று கண்ணிவெடிகளைத் தேடுகின்றனர். எம்மை பொறுத்தவரையில் இது ஒரு பிரச்சினையல்ல.

ஊடகங்கள் அனைத்தும் தென்னிலங்கையின் அரசியல் குறித்தே பேசுகின்றன. இலங்கையின் ஒரு பகுதியாக வடக்கு - கிழக்கும் உள்ளது எனத் தெரிவித்தார்.

# விசேட கலந்துரையாடல்!

வடமராட்சி கிழக்கு —

வடமராட்சி கிழக்கில் தெரிவு செய்யப்பட்ட மக்கள் கட்டுமானப் போர் எழுச்சிக் குழுவினர்களுக்கான விசேட கலந்துரையாடல் கடந்த 6 ஆம் திகதி நடைபெற்றது.

வடமராட்சி கிழக்கில் அமைந்துள்ள புலிகளின் பிரத்தியேகப் பாசறை ஒன்றில் புலிகளின் வடமராட்சி கிழக்கு அரசியல்துறை பொறுப்பாளர் இசையூரான் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - இராணுவத்தினர் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்போகும் பாரிய யுத்தத்தை தமிழ்மக்கள் எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்து தமிழீழ தேசிய இளையோர் படைப் பொறுப்பாளர் தீபன் கருத்துரை வழங்கினார்.

# விண்ணப்பம் கோரல்

வட்டக்கச்சி —

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை கிளிநொச்சி மாவட்டத்தில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தேசிய சான்றிதழ் கற்கைநெறியை அரசாங்க அதிபரின் அனுசரணையுடன் நடத்தத் திட்டமிட்டுள்ளது.

இந்தக் கற்கை நெறிகளைப் பயில்வதற்கு ஆர்வமுள்ள மாணவர்கள் தமது சுயவிபரக் கோவையை மாவட்டச் செயலர், மாவட்டச் செயலகம் கிளிநொச்சி என்ற முகவரிக்கு எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (09)

# படையினரை இலக்குவைத்து மன்னாரில் கைக்குண்டு வீச்சு

மன்னார் —

மன்னார் சவுத்பார் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு படையினர் மீது கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இரவு 7.35 மணியளவில் சவுத்பாரை நோக்கி ரோந்து சென்ற படையினரை இலக்கு வைத்தே இந்தக் கைக்குண்டு வீச்சு நடத்தப்பட்டது. இதனையடுத்து படையினர் சில நிமிடங்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். எனினும் எவருக்கும் எதுவித சேதமும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கடந்த திங்கட்கிழமை இரவு மன்னார் வைத்திய சாலை சந்தியில் உள்ள வீடொன்றில் சமையல் அறையில் உள்ள உணவுப் பொருட்கள் மற்றும் பாத்திரங்கள் களவாடப்பட்டுள்ளன.

வைத்தியசாலைச் சந்தியில் படையினரின் காவலரண் அமைக்கப்பட்டு, பாதுகாப்பு பலப்படுத்தப்பட்ட பின்னர் அருகில் உள்ள வீடுகளில் இருந்தவர்கள் இரவு நேரங்களில் தங்குவதில்லை.

இந்த நிலையில் குறித்த வீடு உள்ள பகுதியில் பெருமளவில் படையினர் கண்காணிப்பு நடவடிக்கையில் உள்ள போது இரவுவேளை இந்தத் திருட்டுச் சம்பவம் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (மோ)

# 2 ஆம் கட்ட வீடமைப்புக்கு 1500 பயனாளிகள் தெரிவு

கிளிநொச்சி —

உலகவங்கியின் நிதியுதவியுடனான வடக்கு - கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டத்தின்கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் இரண்டாம் கட்டமாக 1500 வீடுகள் கட்டுவதற்கு பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட வீடமைப்புத் திட்ட பிரதிப் பணிப்பாளர் வ. சத்தியசீலன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

கிளிநொச்சி மாவடடத்தில் 49 கிராமங்களிலிருந்து உலகவங்கியின் பிரமாணங்களுக்கமைய 1500 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இந்தத் தெரிவுகள் அனைத்தும் வீடமைப்புத் திட்டக் குழுவினதும், பிரதேச செயலர் பிரிவு உத்தியோகத்தர்களினதும் கிராமிய புனர்வாழ்வுக் குழுவினரதும் செயற்பாடுகள் மூலம் தெரிவுசெய்யப்பட்டன.

மக்களின் குறைகேள் நிவர்த்தி முறையூடாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் அனைத்தும்பிரதேச மட்டத்தில் நன்கு பரிசீலனை செய்யப்பட்டு இறுதிப் பட்டியல் தெரிவு நிறைவு செய்யப்பட்டது.

இவை யாவும் மாவட்ட மட்ட வீடமைப்பு ஒருங்கிணைப்பு கண்காணிப்புக்குழுவினரால் அங்கீகரிக்கப்பட்டது.

தற்போது தெரிவுசெய்யப்பட்ட 1500 பயனாளிகளுக்குமான முதலாவது கொடுப்பனவு அவர்களின் வங்கிக்கணக்குக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இந்த முதலாவது கொடுப்பனவில் அத்திவாரம் கட்டப்பட்டு முடிக்கப்படுமிடத்து இரண்டாம் கட்டக் கொடுப்பனவு வழங்கப்படும்.

இந்தத் தெரிவில் இடம்பெறாத, தகுதியுடைய மக்கள் அடுத்த கட்டங்களில் இணைத்துக்கொள்ளப் படுவரென அவர் மேலும் தெரிவித்தார்.

# கொட்டப்பட்ட கிரவலால் போக்குவரத்து பாதிப்பு

கிளிநொச்சி —

விசுவமடு நகர சந்தியிலிருந்து தொட்டியடி செல்லும் வீதியின் திருத்தப் பணிகளுக்காக குறித்த வீதியில் கிரவல் குவிக்கப்பட்டுள்ளதால், வாகனப் போக்குவரத்துக்குத் தடையாக உள்ளதுடன், பயணம் செய்வோரும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறித்த வீதியில் கொட்டப்பட்டுள்ள கிரவலை அடுத்து, தமிழீழ போக்குவரவுக் கழகத்தின் பஸ்சேவை நீண்ட நாட்களாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதனால் பாடசாலை மாணவர்கள், மக்கள், அரச நிறுவனப் பணியாளர்கள் எனப் பலரும் பாதிப்படைந்துள்ளனர்.

எனவே, கொட்டப்பட்ட கிரவலை வீதி திருத்த வேலைக்குப் பயன்படுத்தி, போக்குவரத்துக்கு வழி அமைக்குமாறு மக்கள் தெரிவித்தனர். (கு)

# வன்னி விளாங்குளம் துயிலுமில்லத்தில் லெப்.குட்டிமணியின் வித்துடல் விதைப்பு

வெள்ளாங்குளம் —

வெள்ளாங்குளம் காட்டுப் பகுதியில் படையினரின் கிளைமோர் தாக்குதலில் வீரச்சாவைத் தழுவிய லெப்டினன்ட் குட்டிமணியின் வித்துடல் முழுமையான இராணுவ மரியாதைகளுடன் வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது.

முன்னதாக பாலிநகர் பாடசாலை மண்டபத்தில் வித்துடல் வைக்கப்பட்டு, மக்களின்இறுதி வணக்க நிகழ்வு நடைபெற்றது.

பாண்டியன்குள அரசியல்துறைப் பொறுப்பாளர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடரை போராளி சசி ஏற்றினார்.

ஈகச்சுடரை குட்டிமணியின் தாயார் ஏற்றினார். மலர்மாலையை அவரது துணைவியார் அணிவித்தார்.

கருத்துரைகளை பாலிநகர் பாடசாலை அதிபர், மல்லாவிக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அருந்தவம் ஆகியோர் வழங்கினர்.

தொடர்ந்து அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் வித்துடல் எடுத்துச் செல்லப்பட்டு, வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் முழுமையான இராணுவ மரியாதைகளுடன் வித்துடல் விதைக்கப்பட்டது. (கு)

# நாட்டுப் பற்றாளர் சசிகலாவின் இறுதி வணக்க நிகழ்வு!

கிளிநொச்சி —

தமிழீழ சுகாதார சேவைகளின் நடமாடும் மருத்துவ சேவையைச் சேர்ந்த நாட்டுப்பற்றாளர் தங்கராசா சசிகலாவின் இறுதிவணக்க நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

தமிழீழ சுகாதார சேவைகள் நடுவப் பணியகத்தில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர். த.வாமன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - சசிகலாவின் திருவுருவப்படத்துக்கு அவரது சகோதரர்கள் ஈகச்சுடரேற்றி மலர்மாலை அணிவித்தனர்.

தொடர்ந்து நினைவுரையை தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி நிகழ்த்தினார்.

நிகழ்வில் கலந்து கொண்ட பொறுப்பாளர்கள், போராளிகள், பணியாளர்கள், பொதுமக்களின் மலர் வணக்க நிகழ்வையடுத்து நாட்டுப்பற்றாளர் சசிகலாவின் பூதவுடல் திருநகர் மயானத்தில் அக்கினியில் சங்கமமாகியது.

# கால்வாய் நோய் தடுப்பூசி ஏற்றல்

வட்டக்கச்சி —

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் பரவிவரும் கால்வாய் நோயைக் கட்டுப்படுத்தும் நோக்குடன், நேற்று கால்வாய் நோய்த் தடுப்பூசி ஏற்றப்பட்டது.

இந்த நோய் பரவாமல் தடுப்பதற்கு கால்நடைகளைக் கட்டி வைத்து, ஒத்துழைப்பு வழங்குமாறு கண்டாவளை கால்நடை வைத்தியர் கேட்டுள்ளார். (09)

# சியாமளா பயிற்சிப் பாசறையின் தற்காப்புப் பயிற்சிகள் நிறைவு!

இராமநாதபுரம் —

வட்டக்கச்சி சியாமளா பயிற்சிப் பாசறையில் மக்களுக்கான தற்காப்பு பயிற்சி நிறைவு நாள் நிகழ்வு - கடந்த 10 ஆம் திகதி பிற்பகல் 4.30 மணிக்கு வட்டக்கச்சி தெற்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

வலய பொறுப்பாளர் சீலன் தலைமையில் ஆரம்பமான இந்த நிகழ்வில் பொதுச்சுடரை தூயவன் அரசறிவியற் கல்லூரி முதல்வர் அரசண்ணா ஏற்றினார்.

தேசியக் கொடியை அரசியல் துறையின் விசேட வேலைத்திட்டப் பொறுப்பாளர் சாகியன் ஏற்றினார்.

தொடர்ந்து மாவீரர் சியாமளாவின் திருவுருவப்படத்துக்கு ஈகச்சுடரை அவருடைய பெற்றோர் ஏற்றி வைக்க, மலர்மாலையை பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் சுரேன் அணிவித்தார்.

சிறப்புரையை தூயவன் அரசறிவியல் கல்லூரி முதல்வர் நிகழ்த்தினார். தொடர்ந்து விளையாட்டு நிகழ்வுகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டு, பயிற்சி நிறைவு அட்டையும் வழங்கப்பட்டது. (இ)

# கண்காணிப்புக் குழுவினருடன் ஞானம் சந்தித்து கலந்துரையாடல்

வவுனியா —

வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஞானத்துக்கும், போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் மாவட்ட பிரதித்தலைவர் வென்றுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

முற்பகல் 10 மணிக்கு வவுனியா மாவட்ட அரசியல்துறைச் செயலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

படையினரால் வவுனியா வடக்கு பிரதேச செயலருடைய வாகனத்தின் மீது நடத்தப்பட்ட கிளைமோர்த் தாக்குதல், நிகொட் வாகனத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் மற்றும் புதூர்ப் பகுதியில் நடத்தப்பட்ட கிளைமோர்த்தாக்குதலில் விவசாயி ஒருவர் கொல்லப்பட்டமை உட்பட்ட, அண்மைய படையினரின் தமிழின அழிப்பு நடவடிக்கைகள் குறித்து மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளரால் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதியிடம் முறையிடப்பட்டது. (கு)

# 15 அகதிகள் கடலில் கைது

மன்னார் —

தமிழகத்துக்கு அகதிகளை ஏற்றிச்சென்ற படகு ஒன்றை கடற்படையினர் கைப்பற்றினர். நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் கைப்பற்றப்பட்ட இந்தப் படகில் 15 அகதிகள் இருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸாரும், கடற்படையினரும் விசாரணை நடத்திவருகின்றனர். (கு)

# மக்கள் படைக் கட்டுமான அடிப்படை பயிற்சி நிறைவு

இராமநாதபுரம் —

கப்டன் முத்தையன் நினைவாக வட்டக்கச்சிப் பிரதேச நாவல்நகர், சம்புக்குளம் மக்களுக்கான மக்கள் படைக் கட்டுமான அடிப்படைப் பயிற்சி நிறைவு நிகழ்வு கடந்த 9 ஆம் திகதி 5 மணிக்கு நடைபெற்றது.

பயிற்சி ஆசிரியர் நாவேந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பயிற்சியாளர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. நிகழ்வில் பொதுச்சுடரை தமிழீழ அரசியல் ஆய்வுமையப் பொறுப்பாளர் கவியழகன் ஏற்றினார்.

தமிழீழ தேசியக்கொடியை வட்டக்கச்சிப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் சுரேன் ஏற்றினார். கருத்துரைகளை பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர், தமிழீழ அரசியல் ஆய்வுமையப் பொறுப்பாளர் கவியழகன் ஆகியோர் நிகழ்த்தினர்.

அதனைத் தொடர்ந்து பயிற்சியாளர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

தொடர்ந்து விளையாட்டுப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில் வழங்கலும், பயிற்சியாளரின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ)

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!
குடிபுறங்காத்து ஓம்பி குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்.

- திருக்குறள்

## நமது நோக்கு

# சமாதானத்தின் சாவுமணி

நோர்வே அரசு சமாதான முயற்சிகளில் நடுநிலையுடன் செயற்படுகிறதா என்ற சந்தேகம் இலங்கை அரசுக்கு எழுந்திருப்பதாக பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் கெகலிய ரம்புக்வெல தெரிவித்திருக்கிறார்.

மகிந்த ராஜபக்ஷவின் அரசு பதவியேற்ற காலப் பகுதியில் கூட கிட்டத்தட்ட இதே விதமான கருத்துகள் வெளிவந்தன. பின்னர் நோர்வேயின் அனுசரணையில் தமக்கு நம்பிக்கையிருப்பதாக ஜனாதிபதி மகிந்த தெரிவித்ததுடன் சமாதான முயற்சிகளில் ஈடுபட அந்த நாட்டுக்கு அழைப்பும் விடுத்திருந்தார்.

ஆனால், இப்போது இலங்கை அரசுக்கு நோர்வேயின் நடுநிலைத்தன்மை மீது சந்தேகம் எழுந்திருப்பது முக்கியத்துவமானது. இலங்கை அரசுக்கு நோர்வேயின்மீது இந்த சந்தேகம் எழுந்ததற்கு - புலிகளுக்கு சார்பாகவோ இலங்கை அரசுக்கு பாரபட்சமாகவோ நோர்வே நடந்து கொண்டதாக காரணம் காட்டப்படவில்லை.

பாரபட்சமின்றி இருதரப்புடனும் சமமாக நடந்து கொண்டதால்தான் - நோர்வேயின் நடுநிலை மீது தமக்கு சந்தேகம் எழுந்திருப்பதாக இலங்கை அரசு கூறியிருக்கிறது.

இதை வேடிக்கை என்பதா? நகைச்சுவை என்பதா? தெரியவில்லை. நடுநிலைமையோடு செயற்பட்டதற்காக - நோர்வே மீது அரசுக்கு சந்தேகம் என்று கூறுவதை எப்படித்தான் ஏற்க முடியும்?

போர்நிறுத்த உடன்பாட்டை மதித்து நடக்கிறீர்களா என்று புலிகளுக்கு அனுப்பிய அதே கடிதத்தை அரசுக்கும் அனுப்பியதுதான் - அரசுக்கு பிழையான காரியமாகத் தெரிகிறதாம்.

அரசுக்கு சமமான அந்தஸ்தை நோர்வே புலிகளுக்கு கொடுத்து - அவர்களின் தனி நாட்டு போராட்டத்துக்கு அங்கீகாரம் பெற்றுக்கொடுக்க முனைவதாக அரசாங்கத்துக்குச் சந்தேகம் எழுந்திருக்கிறது.

அரசாங்கத்தின் இந்தச் சந்தேகம் பல்வேறு முக்கிய முடிவுகள், விளைவுகளுக்கு காரணமாக இருக்கப்போவது தெளிவாகவே தெரிகிறது.

இலங்கை அரசும், புலிகளும் சமதரப்பு என்ற நிலைப்பாட்டின் அடிப்படையில்தான் - போர்நிறுத்த உடன்பாடு செய்துகொள்ளப்பட்டது. பேச்சுகள் நடத்தப்பட்டன. ஆனால், இப்போது புலிகளை சமதரப்பாக ஏற்றுக்கொள்ள இலங்கை அரசு மறுக்கிறது.

புலிகளை சமதரப்பாக மதிக்காத அரசுடன் சமாதானப் பேச்சுகள் சாத்தியமற்றுப் போகவே செய்யும். இந்தக் கட்டத்தில்தான் புலிகளை சமதரப்பாக மதித்து கடிதம் எழுதிய நோர்வே மீது இலங்கை அரசு சீறத் தொடங்கியிருக்கிறது.

நோர்வேயின் அனுசரணை மீது எழுப்பப்பட்டிருக்கும் சந்தேகமானது எதிர்காலத்தில் இந்த நாட்டின் அனுசரணைப் பணியை கேள்விக்குள்ளாக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

இலங்கை அரசு இப்போது எப்படியெல்லாம் சமாதான முயற்சிகளை சீர்குலைக்கலாம் என்று கங்கணம் கட்டிக்கொண்டு செயற்படுகிறது. கண்காணிப்புக்குழுவின் அறிக்கை நாட்டின் சட்டதிட்டத்துக்கு முரணானது என்று கிளப்பப்பட்டிருக்கும் பிரச்சினை - நோர்வேயின் நடுநிலை மீதான சந்தேகம், புலிகளை சமதரப்பாக அங்கீகரிக்க முடியாதென்ற முரண்டு - இவையெல்லாமே இதற்கான முயற்சிகள்தான்.

சமாதான முயற்சிகளை சீர்குலைத்து சண்டையைத் தொடங்குவதற்கு அரசு தயாராகி விட்டதையே இது காட்டுகிறது. புலிகளை சமதரப்பாக ஏற்க முடியாதென அரசு எடுத்திருக்கும் நிலைப்பாடு - சமாதான முயற்சிக்கான சாவுமணி அல்லது முறிவுக்குச் சமமாகும்.


புலிகளை சர்வதேச ரீதியில் பயங்கரவாதிகளாக்கி - அவர்களை சமதரப்பு நிலையில் இருந்து கீழிறக்கி விட்டு தான் விரும்பியபடியே தமிழ் மக்களை அழித்து விடலாம் என்று சிங்கள ஆட்சியாளர்கள் நினைக்கிறார்கள் போலும்.

ஆனால், ஒருபோதும் இந்த முயற்சி வெற்றி பெற மாட்டாது. நோர்வேயின் நடுநிலையை கேள்விக்குள்ளாக்கியிருப்பதன் மூலம் இலங்கை அரசு சர்வதேச சமூகத்தையே அவமானப்படுத்தத் தொடங்கியிருக்கிறது.

அரசின் இந்த நிலைப்பாடு நாட்டை அழிவுக்குள்தான் தள்ளப்போகிறதே தவிர வேறெதுவும் நடக்காது.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

## நாடும் நடப்பும்



நன்றி:- டெய்லிமிரர்

# காணாமற்போன எட்டு தமிழர்களின் நிலைகுறித்து மன்னிப்புச்சபை கேள்வி

கொழும்பு —

யாழ்ப்பாணத்தில் காணாமல் போன 8 தமிழர்களது நிலை என்ன என்பதை தெரிவிக்குமாறு அரசாங்கத்தை சர்வதேச மன்னிப்புச் சபைகேட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் கடந்த மே 6 ஆம் திகதி கோவில் ஒன்றில் உறங்கிக் கொண்டிருந்த இராசநாயகம்பிள்ளை சிவானந்தமூர்த்தி, மார்க்கண்டு புஸ்பகாந்தன், கந்தசாமி பரிமேழலகன், வைகுந்தவாசன் விகுந்தகுமார், இரட்ணம் தயாரூபன், பொன்னம்பலம் பார்த்தீபன், செல்வரட்ணம் சிவானந்தம் மற்றும் இராமச்சந்திரன் இராசகுமார் ஆகியோர் காணாமல் போயினர்.

இது தொடர்பாகஅவர்களின் உறவினர்கள் மனித உரிமைகள் ஆணைக் குழுவிடம் முறைப்பாடு செய்தனர்.

அந்த முறைப்பாட்டில் கூறப்பட்டிருந்தாவது -

சம்பவ நாளன்று 25 இற்கும் மேற்பட்ட படையினர் எந்தவித காரணமும் இன்றி கோவில் பகுதிக்கு வந்தனர். அன்று அதிகாலை 1 மணியளவில் இராணுவ வாகனங்களின் சத்தமும், துப்பாக்கிச் சூட்டுச் சத்தமும் கேட்டன. அதன் பின்னர் இராணுவ வாகனங்கள் அங்கிருந்து சென்றுவிட்டன.

மீண்டும் அதிகாலை 4.30 மணிக்கு மேலும் இரு இராணுவ வாகனங்கள் அங்கு வந்ததையடுத்து மக்கள் அச்சமடைந்தனர். கோவிலில் உறங்கிக் கொண்டிருந்த 8 பேரினதும் நிலைமையை அறிய விடியும் வரை மக்கள் காத்திருந்தனர்.

காலை 6 மணியளவில் கோவிலுக்குச் சென்ற போது அங்கு சில இராணுவத்தினர் நின்றிருந்தனர். இராணுவ வாகனமும் இருந்தது. பொதுமக்களைக் கண்ட அவர்கள் உடனே வரணி இராணுவ முகாமை நோக்கிச் சென்றனர்.

சம்பவம் நடந்த இடத்திலிருந்து 3 கிலோ மீற்றர் தொலைவில் இராணுவத்தின் 52 ஆம் படையணித் தலைமையகம் உள்ளது என்று அந்த முறைப்பாட்டில் கூறப்பட்டிருந்ததாக சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

மேலும், 8 பேரினது சடலங்கள் இருப்பதாகக் கூறப்பட்ட இடத்துக்கு மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் சென்ற போது இரத்தக்கறைகள், வெற்றுத் தோட்டாக்கள் மற்றும் அடையாள அட்டைகள், கிழிந்த ஆடைகள் இருந்தமையைக் கண்டுள்ளனர் என்றும் சர்வதேச மன்னிப்புச் சபை கூறியுள்ளது. எனவே, காணாமல் போன 8 பேரின் நிலை என்ன என்பது தெரிவிக்கப்பட வேண்டும் என்றும் சர்வதேச மன்னிப் புச்சபை அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டுள்ளது.

# வேலையற்றோர் எண்ணிக்கை ஆறு இலட்சத்து 23 ஆயிரம்!

## மத்திய வங்கி தெரிவிப்பு

கொழும்பு —

இலங்கையில் 6 லட்சத்து 23 ஆயிரம் பேர் வேலை இல்லாமல் இருப்பதாக மத்தியவங்கி வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேலை செய்யக்கூடிய தகுதியுடையவர்களில் 7.7 வீதமானவர்கள் வேலையின்றியுள்ளனர்.

இதில் 15 வயது முதல் 19 வயது வரையானோர் 30.8 வீதமாகவும், 20 வயது முதல் 29 வயது வரையானோர் 17.2 வீதமாகவும், 30 வயது முதல் 39 வயது வரையானோர் 3.8 வீதமாகவும், 40 வயதுக்கு மேற்பட்டோர் 1.2 வீதமாகவும் வேலை வாய்ப்பற்றவர்களாகக் காணப்படுகின்றனர்.

இவர்களில் க.பொ.த உ/த பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் 13.8 வீதமும் க.பொ.த சா/த பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் 11.5 வீதமும் காணப்படுகின்றனர்.

இதேவேளை உலகளவில் 1995ஆம் ஆண்டில் அதிகளவிலான இளைஞர்கள் வேலையற்றிருப்பதாகவும் இன்னும் இருபது ஆண்டுகளில் இது இரு மடங்காக அதிகரிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வெலிசறை குண்டுவெடிப்புக்கு வவுனியா நபரே காரணமாம்!

## விசாரணை அதிகாரி தகவல்

கொழும்பு —

வெலிசறை கடற்படைக்கு அருகில் வெடித்த இரண்டு கிளைமோர்களை வவுனியாவிலிருந்து வந்தவரே பொருத்தினாரென தகவல்கள் கிடைத்துள்ளதாகக் குறித்த குண்டு வெடிப்புத் தொடர்பாக விசாரணைகளை மேற் கொண்டு வரும் படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

குறித்த நபர் ராகம நகரில் அடிக்கடி நடமாடுபவர். குண்டு வெடிப்பை அடுத்து அவர் தலைமறைவாகியுள்ளார். சந்தேக நபர் குண்டு வெடிப்பு நடந்த தினத்துக்கு முதல் நாள் கறுப்பு நிறப் பையொன்றை தோளில் வைத்திருந்து ராகம நகரில் நடமாடியதாக தகவல் கிடைத்துள்ளது.

இது தொடர்பான விசாரணையின் போது சந்தேக நபருடன் தொடர்புடைய தொலைபேசி இலக்கமொன்று கிடைத்துள்ளது. தொலைபேசி வலையமைப்பைச் சோதனை செய்வதற்குத் தேவையான தகவல்கள் சம்பந்தப்பட்ட தொலைபேசிக் கம்பனி வழங்குவதில் தாமதம் செய்வது விசாரணைக்குத் தடையாக உள்ளது.

முகாமைச் சுற்றியிருந்த பாதுகாப்புக் குறைபாடுகளே இவ்வாறு குண்டை வெடிக்க வைப்பதற்கு அனுகூலமாக இருந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (தே)

# தொடர்பு கொள்ளவும்

யாழ்ப்பாணம் —

வீதியில் விபத்துக்குள்ளாகி சுயநினைவற்ற நிலையில் பெயர், முகவரி, வயது எதுவும் தெரியாத 40 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவர் யாழ். போதனா வைத்திய சாலையில் கடந்த 12 ஆம் திகதி திங்கட்கிழமை அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவருடன் கிருஸ்ணசாமி பாலகிருஸ்ணன் கெற்பலி எனும் ஓர் அழிந்த நிலையிலுள்ள அடையாள அட்டையும் காணப்பட்டது. இவரது உறவினர்கள் உடனடியாக யாழ். போதனா வைத்திய சாலையின் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வைத்தியசாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

# சுற்றுநிருபத்தை பெற கோரிக்கை

யாழ்ப்பாணம் —

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்தினப் போட்டிகளுக்கான சுற்று நிருபம் வெளியிடப்பட்டுள்ளது.

யாழ்.வலயப் பாடசாலைகளின் அதிபர்கள் சுற்று நிருபத்தை கோட்டக் கல்வி அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளும்படி யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம் தெரிவித்தார்.

# அதிபர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம் —

யாழ்.வலயப் பாடசாலைகளான உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம், புத்தூர் ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் அதிபர் பதவி வெற்றிடமாக உள் ளன.

அதிபர் பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் தி.செல்வரட்ணம் தெரிவித்தார்.

# அதிர்ச்சி நோய் எமக்கல்ல எதிரிக்கே காத்திருக்கிறது

**புலிகளின் குரல் வானொலியின் 'அரசியல் அரங்கம்' நிகழ்ச்சியில் விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன் நிகழ்த்திய உரை**

எமது எதிரிக்கு அடுக்கடுக்கான அதிர்ச்சிகள் காத்திருக்கின்றன .

ஒஸ்லோ பேச்சுவார்த்தைகளுக்கு ஊடாக வருகின்ற செய்திகள் எல்லாம் அதிர்ச்சி, அதிர்ச்சி என்று கூறுகிறது.



இலங்கை அரசுக்கு அதிர்ச்சி நோர்வே தரப்புக்கு அதிர்ச்சி சர்வதேசத்துக்கு அதிர்ச்சி என்று வருகிறது.

'அதிர்ச்சி நோய் எமக்கல்ல' என்ற தலைப்பில் சில கருத்துக்களை பகிர்ந்து கொள்கிறோம்.

இந்தத் தலைப்பு என்னுடைய தலைப்பு அல்ல. இது பெரும் இனப் பற்றாளரான நாகு. பத்மநாதன் ஐயாவினுடைய தலைப்பு. அவர் திருக்குறளை அடிப்படையாக வைத்து சிறு கைநூலை எழுதியிருந்தார். அதன் தலைப்புத்தான் அதிர்ச்சி நோய் எமக்கல்ல என்பது.

விடுதலைப் புலிகளுடைய ஈகம், அவர்களுடைய தற்துணிவு, அவர்களுடைய முயற்சி எல்லாம் எதிரிக்கு எப்போதும் அதிர்ச்சியைக் கொடுத்துக் கொண்டே இருக்கிறது. தடுமாற்றத்தைக் கொடுத்துக் கொண்டே இருக்கிறது. அதிர்ச்சி கொடுப்பவர்களாக தமிழ் மக்கள் இருக்கின்றார்கள்.

ஆதலால், தமிழ் மக்கள் அதிர்ச்சியடைய மாட்டார்கள் என்ற அடிப்படையில் திருக்குறளை அடிப் படையாக வைத்து அவர் சில கருத்துகளை எழுதியிருந்தார். 'அதிர்ச்சி நோய் எமக்கல்ல' என்ற தலைப்பு எமக்கு மிக முக்கியமான தலைப்பாக, தமிழ் மக்கள் தமது மனங்களில் வைத்திருத்தல் வேண்டும்.

இன்று எமது அன்புக்குரிய மக்கள் அதிர்ச்சியடையக் கூடாது. அதிர்ச்சியை எதிரிக்கு கொடுக்க வேண்டும். நாங்கள் அதிர்ச்சி கொள்ளாதிருக்க வேண்டும்.

எப்போதும் அதிர்ச்சி - எதிரிக்கே வரலாறு விளைவித்துக் கொண்டு வருகிறது.

வரலாற்று ரீதியாக எதிரி என்று கூறும் போது எங்களுடைய எதிரியல்ல. மக்கள் கூட்டத்துக்கு எதிரி என்று கூறும் போது - அடக்குமுறையாளன், ஒடுக்குமுறையாஎன், ஏகாதிபத்தியவாதி, சர்வாதிகாரி என்று கூறக் கூடிய அதிகாரங்களைக் கைகளில் வைத்திருக்கின்றவர்களுக்கு எப்போதும் ஒடுக்கப் படுகின்ற மக்கள் படும் துன்பங்கள் தெரியாது.

அவர்களுடைய மனங்களில் விளைகின்ற அந்தத் தீ பற்றி எரியக் கூடிய அந்த வேணவா போன்றவற்றை எல்லாம் அவர்கள் அறிய மாட்டார்கள். அவ்வாறு அறிய மாட்டாத நிலையிலேயே அவர்கள் எப்போதும் இறுதி நேரத்தில் பெருத்த அதிர்ச்சிகளை சந்திப்பார்கள்.

மக்களுடைய புரட்சி அல்லது விடுதலைக்கான போர் நடக்கும் போது உண்மையை அறியமுடியாத நிலையிலேயே அவர்கள் எப்போதும் பொய்மைக்குள்வாழ்கின்றபடியால் நிச்சயமாக அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சியடைந்து கொண்டிருப்பார்கள். இது வரலாற்றில் பதியப்பட்ட செய்தியாக இருக்கிறது.

நாங்கள் வரலாற்றிலிருந்து சில உதாரணங்களை பார்ப்போமேயானால் -

இங்கிலாந்து ஏகாதிபத்தியம் வீழ்ச்சியடைந்த போது இங்கிலாந்து பெரும் அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி அடைந்தது.

இங்கிலாந்திலிருந்து - அமெரிக்கா விடுதலை பெற்று சுதந்திரப்போரை நடத்திய போது - இங்கிலாந்து பெரும் அதிர்ச்சிக்குள்ளானது. அதே போன்று அமெரிக்கா காலக்கிரமத்தில் பல அதிர்ச்சிகளைச் சந்தித்தது.

கியூபா, வியட்நாம் ஆகிய நாடுகள் விடுதலை பெற்ற போது அல்லது அண்மையில் செப்ரெம்பர் 11 என்று கூறப்படும் தாக்குதல் நடந்த போது அல்லது ஈராக்கில் தற்போது அமெரிக்கா பேரதிர்ச்சியை சந்தித்துக் கொண்டிருக்கின்றது.

இன்னும் கூறப்போனால் - விடுதலைப் புலிகளினுடைய போராட்டத்தின் விளைவாக சர்வதேசம் பேரதிர்ச்சியைச் சந்தித்தது. உதாரணமாக ஆனையிறவு வீழ்ச்சியின் போதும், அக்கினிச் சுவாலையை நாம் வென்றபோதும் உலகம் பேரதிர்ச்சியைச் சந்தித்தது.

ஆகவே எப்போதும் அதிர்ச்சியடைபவன் ஒடுக்கு முறையாளனாக இருப்பான் என்பது தான் எங்களுடைய முக்கியமான செய்தியாக இருக்கிறது. இது வரலாற்றில் பார்க்கக் கூடிய செய்தி.

எங்கள் மீது தடை விதிப்பதற்கு அமெரிக்காவும், இங்கிலாந்தும் தான் பெரிய ஊக்கத்தையும், தூண்டுதலையும் கொடுத்ததாக நாங்கள் அறிகின்றோம். இவர்கள் எல்லோரும் தாங்கள் அடைந்த அதிர்ச்சிகளை மறந்துவிட்டார்கள். எதிரிக்கு இவர்கள் கொடுத்த அதிர்ச்சிகளையும் இவர்கள் அறியமாட்டார்கள்.

எங்களுடைய வரலாற்றில் ஒரு உதாரணத்தைக் கூறமுடியும். கரும்புலி வடிவம் என்பது உலகத்துக்கு மிகப் பெரிய அதிர்ச்சியாக, புரிந்து கொள்ளமுடி யாத புதிராக இன்றும் இருக்கிறது.

கரும்புலி வடிவம் பற்றி ஆய்வு செய்த அனைத்து ஆய்வாளர்களும் மிகுந்த குழப்பம் அடைந்திருக்கிறார்கள். அதாவது கரும்புலிகள் என்று கூறப்படுகின்ற அந்த வடிவம் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு உள்ளே மூளைச் சலவை செய்யப்பட்டோ அல்லது மத ரீதியான பற்றின் அடிப்படையிலோ அல்லது வேதனை, விரக்தியின் முடிவாகவோ எடுக்கப்பட்ட முடிவு அல்ல என்பது ஒரு பயிற்றுவிக்கப்பட்ட மிகத் தெளிவான மகிழ்ச்சியோடு அமைந்த அணியாக வளர்க்கப் பட்டவிதம் குறித்தும் உலகம் பேரதிர்ச்சியடைந்திருக்கிறது.

இப்படியான அதிர்ச்சிக்கு என்ன காரணமெனில், ஒடுக்கப்படுகின்ற மக்களுடைய மனங்களை அறிய மாட்டாதவர்கள் எப்போதும் , இறுதியில் அதிர்ச்சியடைவார்கள் என்பதற்கு இன்று நோர்வேயில் நடந்த சம்பவங்கள் உதாரணமாக இருக்கிறது.

அடுக்கடுக்காக அதிர்ச்சிகள் எதிரிக்குக் காத்திருக்கின்றன. தலை குனிந்த எமது மக்கள், தலை நிமிரும் போது இறுதி அதிர்ச்சி அவர்களுக்கு காத்திருக்கிறது என்பதை கூறிக்கொள்கிறோம்.

அண்மைக்காலமாக நடக்கும் அவலச் சம்பவங்கள் தரக் கூடிய உளவியல் ரீதியான அழுத்தங்கள் குறித்து நிச்சயமாக நாங்கள் எங்களுக்குள்ளே கலந்து பேச வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

அண்மையில் திரு மாஸ்டர் கட்டுரையில் எழுதும் போது கூறினார் -

தமிழீழ மக்கள் அதிகம் பாதிப்புற்ற , துயருற்ற மக்கள் ஆவர்.

அளவால் சிறிய இந்த மக்கள் கூட்டம் தன் அளவை விடவும் பாரிய சுமைகளை , துயரங்களை சுமந்து நிற்கிறது. ஈவிரக்கமின்றி, ஒடுக்கப்படும் அப்பாவி மக்கள் இவர்கள். உலக அரசுகள் இவர்களது நியாயபூர் வமான உரிமைகளுக்குள்ளாலும், துயரங்களுக்குள்ளாலும் பார்ப்பதை விட எரியும் வீட்டில் கொள்ளி பிடுங்கவே பார்க்கின் றார்கள். எல்லாவிதமான தர்ம போதனைகளும், ஜனநாயகங்களும், உரிமைகளும் இவர்களுக்கு முன்னால் பிணவாடை வீசுவதையே இந்த மக்கள் பார்க்கிறார்கள் என்றார்.

இப்போது எமது மக்கள் பிண வாடை வீசுவதைப் பார்க்கின் றார்கள். செம்மணிப் புதைகுழிகளை தாண்டி கைதடி - தரவை வெளியிலேயே இப்போது பிணவாடை வீசுவதை தமிழ் மக்கள் அனைவரும் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

அது எங்கள் மக்கள் மனங்களில் ஒரு அதிர்ச்சியை ஏற்படுத்துவதை நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறோம். நாங்கள் தற்போது அது குறித்து உங்களோடு பேச வேண்டும் என்று கூறியும் இந்த அதிர்ச்சி நோய்குறித்து நாங் கள் நன்றாக ஒரு விளக்கத்தை பெற்றுக் கொள்ள வேண்டும்.

அதிர்ச்சி கொடுக்கும் எங்களுடைய மக்கள் சிங்களத் தரப்பு தங்களுக்கு விளைவிக்கின்ற அதிர்ச்சிகளை எவ்வாறெனினும் தாங்க வேண்டிய அவசியம் இருக்கிறது.

சிங்களத் தரப்பினுடைய இலக்கானது -

ஒடுக்கப்படுகின்ற தமிழ் மக்களுடைய மனங்கள்தான்.

அந்த மனங்களை மிக மோசமாகப் பாதிப்பதற்கும், ஒரு உளவியல் அழுத்தம் கொடுப்பதற்காகவும் தான் இன்று இந்த விடுதலை வலயம் என்று கூறக் கூடிய வன்னி நிலப்பரப்புத் தவிர்ந்த ஏனைய இடங்களில் மிகப் பெரிய மன அழுத்தத்துக்குள் தமிழ் மக்கள் உள்ளாக்கப்படுகிறார்கள்.

நிரந்தர வாழ்வு கேள்விக்குறியாகி, நாளாந்த வாழ்வு கேள்விக் குறியாக்கப்பட்டு, ஒரு விதமான அராஜக நிலைமை நிலவுவதை நாங்கள் தற்போது பார்க்கிறோம்.

இத்தகைய நிலைமையில் மனித மனம் செயற்படும் விதம் குறித்து சற்று ஆழமாகப் பார்க்க வேண்டிய அவசியம் இருக்கிறது.

மனித மனம் செயற்படும் விதம் அலாதியானது.

மனிதனுடைய மூளை என்பது எந்தவிதமான நெருக்கடிக்கும்முகம் கொடுத்து புதிய, புதிய வழிகளை கண்டுபிடித்து அதேவேளை, சில வேளைகளில் மனமானது இன்னொரு வகையான நிலைப்பாடு எடுக்கும்.

மனித மனம் எப்போதும் வடிகட்டியாகச் செயற்படும். தனக்கு வாய்ப்பில்லாத, உவப்பில்லாத செய்திகளை ஏற்க மறுக்கின்ற மனித மனம் - அந்தச் செய்திகளை வடிகட்டி நிராகரித்து விடுகின்ற நிலை இருக்கிறது.

இப்படியான கொலைகள் நடக்கும் போது - எங்களுடைய மக்கள் இந்த மனநிலைக்குச் செல் வார்களா என்று கூறினால் எதிரிக்கு அது சாதகமாகிவிடக் கூடியதொரு ஆபத்தான செயல் இருப்பதை நாங் கள் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

இந்த மாதிரியான நெருக்கடிகள்,மன அழுத்தங்கள் வரும்போது சில வேளைகளில் எங்கள் மக்களுடைய மனங்களில் இப்படியான நிலைப் பாடுகள் வரக்கூடிய ஆபத்து இருக்கின்றது.

ஒன்று-இந்தச் செய்திகளை ஏற்க மறுக்கின்ற தன்மை.

இரண்டு- மனதில் இவற்றை ஆழப்புதைத்து மேலோட்டமாக எதுவும் நடக்காதது போல செயற்படுகின்றதொரு தன்மை.

அல்லது-நடந்ததை நியாயப் படுத்துகின்ற அதாவது,

விதியின் விளையாட்டு என்று கூறக்கூடிய நிலைப்பாடு.

அல்லது - எதிர்வினைகளை உருவாக்கி, தங்களுக்கு மாற்று வழிகளைத் தேடக்கூடிய தொரு நிலைப்பாடு.

மேலும் தனது இயலாமையை மறைப்பதற்காக இயலுமானது ஒன்றின் மேல் தன்னுடைய அந்தக் கோபத்தை விலக்கிச் செலுத்துகின்ற ஒரு உளவியல் ரீதியான இடம் மாறிய செயற்பாடு என்று கூறுவார்கள்.

எங்கள் மக்களிடத்தில் இத்தகைய பலவித அழுத்தங்களை உருவாக்குவதற்காகத்தான் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மிக மோசமான மனித அவலம் நிகழ்கிறது.

அது எவ்வளவு பெரிய துன்பத்தைக் கொடுக்கக் கூடியதாக இருக்கும் என்று எங்களால் உணரக் கூடியதாக உள்ளது.

இதற்கு மருந்து ஏதும் இல்லை. மனத்திடமும்,மன உரமும் நல்லோர் சொற்களும்தான் சரியான மாற்றாக இருக்க முடியும்.

நாங்கள் அந்நியர்கள்-ஆய்வாளர்களின் கருத்துக்குச் செல்ல வேண்டியதில்லை. எங்களுடைய தளபதிகள்- களத்தில் நின்றவர்கள் - இளைய தளபதி களுடைய அற்புதமான கருத்துகள் எங்கள் மக்களுக்கு ஒரு வகையில் மன ஆறுதலையும், தேறுதலையும் தரும்.

அண்மையில் களமுனைக்குச் சென்ற மக்களிடத்தில் எமதுஇளைய தளபதி லெப்.கேணல் லோறன்ஸ் ஆற்றிய உரையின் ஒரு சிறு பகுதி -

நாங்கள் உயிராக நேசிக்கக் கூடிய பாசத்துக்குரிய அம்மாமாரே!



அப்பாமாரே! சகோதரர்களே!

இந்தக் கள முனையில் உங்களைக் கண்ட அளவற்ற மகிழ்வோடு என் வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது நேரம் பகல் 11.30 மணிதான். இந்தக் கடற்கரை மணல் வெளியில் பரட்டைத் தட்டுகளின் மத்தியில் வெயில் எப்படி கொதித்துக் கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் கண்டு கொண்டிருக்கிறீர்கள்.

குறிப்பாக நீங்கள் இங்கு வந்து சேருவதற்காக சில கிலோ மீற்றர் நடந்தீர்களே. அப்போது நிச்சயமாக எமது வீரர்கள் படும் துன்பங்கள் உங்கள் கண்களுக்குத் தெரிந்திருக்கும்.

'எனது தொப்பியைப் பாருங்கள். இதில் பூத்துக் கிடக்கும் உப்பைப் பாருங்கள். ஒவ்வொரு நாளும் எமது வீரர்கள் இந்தக் களத்தில் சிந்தும் வியர்வைக்கு இது ஓர் சிறு எடுத்துக்காட்டுதான். ஏனெனில் இந்த நாளில் இன்னமும் 12 மணித் தியாலங்கள் இருக்கின்றன'.

நான் உங்களுக்கு இவற்றைக் கூறும் போது, இந்தச் சூழலில் உங்களுக்கு எங்கள் மீது இரக்கம் வரக் கூடும்.ஆனால் நாம் அதை உங்களிடம் எதிர்பார்க்கவில்லை. ஏனெனில் வாழ்வதற்காக எல்லோரும் உழைக்கத்தான் வேண்டும்.

அதுபோல் அடிமையாகப் பிறந்தவன் அந்த நிலையை மாற்றுவது என்றால் போராட்டக் களத்தில் தன்னை வருத்தித்தான் ஆக வேண்டும். என்றார் லோறன்ஸ்.

அடிமையாகப் பிறந்த மக்கள் எங்கோ ஓரிடத்தில் வதையை அனுபவிக்கத்தான் வேண்டும்.

களத்திலே போராளி அனுபவிக்கும் வதை.

தளத்திலே மக்கள் அனுபவிக்கும் வதை.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள நம் மக்கள் அனுபவிக்கும் வதை.

என்பவற்றை எண்ணிப் பார்த்து இந்த வதைகளுக்கு அப்பால் வாழ்வை அமைக்க வேண்டும்.

அண்மையில் வீரச்சாவடைந்த மிக உயரிய ஒரு உச்சவீரன் மாவீரர் லெப்.கேணல்.வீரமணி என்று எங்களுடைய கேணல். பால்ராஜ் வர்ணித்திருந்தார்.

மாவீரர் லெப்.கேணல்.வீரமணி ஆற்றிய இறுதி உரை ஒன்றின் மிகச் சிறுபகுதியில் பாரிய விடயம் ஒன்று இருப்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

கிளிநொச்சியால் வரும்போது எனக்குள்ளே நான் நினைப்பேன், கிளிநொச்சியை மீட்பதற்காக ஒவ்வொரு பற்றைக்குள்ளும், ஒழுங்கைக்குள்ளும் எத்தனை நாள் தண்ணீர் கூடக் குடிக்காமல் வேவு பார்ப்பதற்காக எதிரிகளுக்குள்ளே அலைந்து திரிந்திருப்போம்.

நூற்றுக் கணக்கான போராளிகளின் உயிர்களைக் கொடுத்துத் தான் அதை மீட் டோம். அதேபோல் நீங்களும் (மக் களும்) கிளிநொச்சியிலிருந்து எங் கெங்கோ எல்லாம் இடம் பெயர் ந்து தண்ணீருக்கும், உணவுக்கும் துன்பப்பட்டீர்கள். நாங்கள் துன்ப்பட்டது போலவே நீங்களும் துன்பப்பட்டீர்கள்.

ஆனால், நாங்கள் எல்லோருமாகச் சேர்ந்து ஒரே இலக்குடன் இணைந்து பாடுபட்டிருந்தால், அவ்வளவு துன்பப்பட்டிருக்கத் தேவையில்லை.

கிளிநொச்சியை உடனே மீட்டிருக்கலாம்.அதற்கு இரண்டு வருடங்கள் நாங்கள் காத்திருக்க வேண்டியதாக இருந்தது என்று அவர் கூறியிருந்தார்.

வதைபட வேண்டிய அவசியம் இருக்கிறது என்று ஒரு செய்தியும், வதைக்கு அப்பால் வதையை இலக்குக்காகத் திசை மாற்றும் போது - நிச்சயமாக அது ஒட்டுமொத்த மா்ன பலனாக விடுதலையாக மாறும்.

அவ்வாறில்லாமல் தனித் தனியாக வதைபட்டுக் கொண்டிருந்தால், அந்த வதையானது அவலத்தைத் தந்து இறுதியில் மனச் சோர்வைத் தரும்.

நமது துன்பங்கள் யாவும் விடுதலைக்காக - நமது விடுதலைக்காக நாம் துன்பப்படுகிறோம் என்று செயலாற்றும்போது நமக்கு அதிர்ச்சி நோய் வராது.

தமிழீழ மக்கள் அனைவருமே எதிரிக்கு அதிர்ச்சி நோயை விளைவிக்கும் போது - நிச்சயமாக எதிரி மடிவான்.

அண்மைக்காலமாக எமது விடுதலைப் போராட்டம் உலகத்துக்கு கொடுத்திருக்கக் கூடிய அதிர்ச்சிக்கு மேலான அதிர்ச்சியானது - ஒரு புதிய தரநிலை மாற்றத்துக்குட்பட்டிருக்கிறது என்பதைத்தான் கூறுகிறது. இதுதான் ஒஸ்லோ பேச்சுகளின் வெளிப்பாடு.

அதன் விளைவாகத்தான் எரிக் சொல்ஹெய்ம்,இரு தரப்பினரது தலைமைப்பீடத்துக்கும் 5 வினாக்களை அனுப்பியுள்ளார்.

அந்த வினாக்களுக்கு சரியான விடை கிடைக்காவிட்டால், நாங்கள் நடுவர் நிலையை மீளாய்வு செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவோம் என்று சொல்லக் கூடிய மிக மோசமான நிலைக்கு வந்து விட்டோம் என்று சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.


ஆகவே "அதிர்ச்சி நோய் எமக்கு அல்ல" என்றார்.




ஒஸ்லோ அரச மாளிகைக்கு முன்னால் மங்கள சமரவீரவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நூற்றுக்கணக்கான தமிழர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதைக் காணலாம்.

# தமிழக உறவுகளின் உணர்வும், ஈடுபாடும் இந்திய அரசின் நிலைப்பாட்டை மாற்றும்!

## அரசியல்துறைப் பொறுப்பாளர் நம்பிக்கை



கிளிநொச்சி —

எமது தமிழக உறவுகளின் உணர்வும், ஈடுபாடும் தமிழக மற்றும் இந்திய அரசின் நிலைப்பாடுகளில் மாற்றத்தை உருவாக்கும் என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நம்பிக்கை தெரிவித்தார்.

அவுஸ்ரேலிய இன்பத்தமிழ் ஒலி வானொலிக்கு கடந்த சனிக்கிழமை நோர்வேயிலிருந்து அளித்த நேர்காணலில் அவர் கூறியுள்ளதாவது -

எமது உறவுகளாகிய தமிழ்நாட்டு மக்கள் தமிழீழம் தொடர்பாக-தமிழீழ மக்களது விடுதலைப் போராட்டம் தொடர்பாக முழுஅளவிலான ஆதரவுடன்தான் இருக்கின்றனர்.

தமிழ்நாட்டில் உள்ள எங்கள் மக்கள் தலைவர் மீதும், எமது போராட்டம் மீதும் முழு நம்பிக்கையோடு உள்ளனர்.

தமிழக மக்களின் உணர்வும், ஈடுபாடும் நிச்சயமாக தமிழக அரசு மற்றும் இந்திய அரசுகளின் நிலைப்பாடுகளில் தமிழீழ மக்களுக்கு ஒரு ஆதரவான நிலையை ஒருநாள் கொண்டுவரும் என்பதில் எமக்கு அசைக்க முடியாதநம்பிக்கை உள்ளது.

எமது மக்கள் மீது கொடூரமாக கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் இனப்படுகொலைகள் மற்றும் கொடூரங்கள் பற்றி நன்கு அறிந்தவர்களாகவே இருந்திருக்கின்றனர்.

அவர்களுக்கு இடைக்காலத்தில் சில நெருக்குவாரங்கள் ஏற்பட்டிருந்தாலும், தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்பாகவும் தமிழ் மக்கள் மீது சிங்கள இனவாதிகள் கட்டவிழ்த்து விட்டிருக்கும் வன்முறைகளையும் அறிந்து தமிழகத்தில் தங்களது எதிர்ப்புகளையும், தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கான தார்மீக ஆதரவுகளையும் தமிழகத்தில் வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

மிகவிரைவில் தமிழக மக்களும் தமிழக அரசும் எமது தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவான நிலைப்பாட்டை நிச்சயம் ஒன்றுபட்டு வெளிப்படுத்துவார்கள் என்பதில் நம்பிக்கை உள்ளது.

ஏனெனில், நீதியும் நியாயமும் எங்கள் பக்கம் உள்ளது. எங்கள் உறவுகள் உலகெங்கும் பரந்து வாழ்ந்தாலும் எங்கள் மக்கள் தாக்கப்படும் போது, எங்கள் மக்கள் மீது கொடூரங்களை, அவலங்களைத் திணிக்கின்ற போது, எங்கள் மக்களை நசுக்குகின்றபோது பொறுத்துக்கொண்டிருக்க மாட்டார்கள்.

தமிழ்நாட்டிலும் எங்கள் தமிழ் மக்கள் நிச்சயமாக சிங்கள ஆக்கிரமிப்புப் படைகளின் கொடூரங்களுக்கு எதிரான உணர்வுகளை வெளிப்படுத்துவார்கள்.

தமிழர்கள் மீதும் தமிழர் தாயகத்தின் மீதும் ஒரு கொடுமான இன வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டிருக்கும் அரசாங்கத்தின் மீது இந்திய மத்திய அரசானது இராஜதந்திர அழுத்தங்கள் உட்பட பல்வேறு அழுத்தங்களை ஏற்படுத்தி, இனவெறியையும், படுகொலைகளையும் கண்டிக்கும் நிலை உருவாகவேண்டும்.

தமிழகத்தில் வாழும் எமது உறவுகளின் ஒன்றுபட்ட உணர்வின் வெளிப்பாட்டில்தான் இந்திய மத்திய அரசு மட்டத்தில் இந்த மாற்றங்களும் வெளிப்பாடுகளும் வரும் என்று நினைக்கிறோம்.

சர்வதேச நாடுகள் எம்மீது தடைவிதிக்கும் அரசாங்கத்தின் முயற்சிகள் முட்டாள்தனமானவை. பாரிய எதிர் விளைவை உருவாக்கப் போகிறது.

சர்வதேசத்தின் பெருமளவிலான உதவிகளைப் பெற்றுக்கொண்டு தான் அரசாங்கம் தமிழர்களை இனப்படுகொலை செய்தது.

ஆனால், எமது தலைவரும் மக்களும் இராணுவ ரீதியாக வலுப்பெற்று அரசாங்கத்தை முடக்கும் வகையிலான வலிமையைப் பெற்றனர்.

அனைத்து வகையிலும் படு தோல்வியடைந்த நிலையில்தான் சர்வதேசத்தின் காலடியில் விழுந்து அரசாங்கம் பேச்சுக்களுக்கு வந்தது.

இனப்படுகொலைகளை மேற்கொள்வதற்காகத்தான் தமிழீழ விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்தும் இந்தத் தடை முயற்சிகளாகும்.

சிங்கள அரச பயங்கரவாதத்தை முறியடிப்பதைத்தவிர எங்களுக்கு மாற்று வழியேதும் இல்லை. எங்கள் மக்களும் முழுஅளவில் எழுச்சியுடன் உள்ளனர்.

அரசாங்கத்தை திருப்திப்படுத்தும் சர்வதேச சமூகத்தின் போக்கும் ஒட்டுமொத்த தமிழ் மக்களை தமது பலத்தில், சுயத்தில், தமது வழியில் நின்று தற்காத்துக்கொள்கின்ற தீர்மானங்களை எடுக்கும் நிலைக்கு தள்ளியிருக்கிறது என்று அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

# கிராம அலுவலர் மீதான தாக்குதல்; விசாரணை நடத்தப்படவேண்டும்!

## அரச அதிபர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம் —

கோப்பாய் மத்தி கிராம அலுவலர் ஜோசப் இரத்தினராசா மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்துமாறு யாழ். அரச அதிபர் கே.கணேஷ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக யாழ்.செயலகம் விடுத்துள்ளசெய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த கோப்பாய் மத்தி (ஜே/261) கிராம அலுவலர் கு.ஜோசப் இரத்தினராசா கடந்த 9 ஆம் திகதி காலை 8 மணியளவில் அவரது வீட்டில் வைத்து துப்பாக்கியால் சுடப்பட்டு காயமடைந்த சம்பவம் தொடர்பாக யாழ்.பாதுகாப்பு படைத்தலைமை அதிகாரி, யாழ்.பிரதிப்பொலிஸ் மா அதிபர், போர்நிறுத்த கண்காணிப்புக்குழு யாழ்.அலுவலகம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். அலுவலகம், பொதுநிர்வாக உள்நாட்டு அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன்- இது தொடர்பான விசாரணையை மேற்கொள்ளுமாறும் கோரப்பட்டுள்ளது.

மேலும், இவ்வாறான சம்பவங்களால் கிராம அலுவலர்கள் குழப்பமடைந்துள்ளதுடன் சிவில் நிர்வாக நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் பாரிய கஷ்டங்களை எதிர்நோக்குவதாகவும் அந்தச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மீனவர்களை விடுவிக்காவிட்டால் அமைதி வழியில் போராடுவோம்!

## சக்கோட்டை மீனவர் சங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் —

இராணுவத்தினர் கைதுசெய்த மீனவர்கள் மூவரையும் விடுதலை செய்யாவிடின் - அமைதி வழியில் போராட்டத்தை முன்னெடுப்போம் என சக்கோட்டை கடற் தொழிலாளர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக சங்கம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

கடந்த மாதம் 28 ஆம் திகதி வடமராட்சிக் கடற்பரப்பில் கடற்தொழிலில் ஈடுபட்டிருந்தவேளை மூன்று மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இந்தச்சம்பவம் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழு, போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஆகியவற்றில் ஆதாரங்களுடன் முறைப்பாடு செய்திருந்தோம்.

கைதுசெய்யப்பட்ட மூவர் தொடர்பாக இதுவரை ஆக்கபூர்வமான முடிவுகள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இதனால் மீனவர்கள் தொழிலுக்குச்செல்வதற்கு அச்சமடைந்துள்ளனர்.


எனவே, கைதுசெய்யப்பட்ட மீனவர்களை விடுதலை செய்தல் மற்றும் மீனவர்கள் அச்சமின்றி தொழிலுக்குச் செல்வதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டியது சம்பந்தப்பட்ட தரப்பினரது கடமையாகும்.

இன்னும் சில தினங்களில் கைது செய்யப்பட்ட மூவர் தொடர்பாக சாதகமான பதில் கிடைக்காவிட்டால் - அமைதி வழியில் போராட்டம் முன்னெடுக்கப்படும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சர்வதேச குருதிக் கொடையாளர் தினத்தை முன்னிட்டு யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் நேற்று பொதுமக்கள் இரத்த தானம் செய்தகாட்சி. படம்:- விபுலன், கசன்

## நூல் அகம்




சஞ்சிகையின் பெயர்:- கூத்தரங்கம்
வெளியீடு :- செயற்திறன் அரங்கஇயக்கம், திருநெல்வேலி.

செயற்திறன் அரங்க இயக்கத்தினரால் வெளியிடப்படும் கூத்தரங்கம் என்ற சஞ்சிகை கிடைக்கப்பெற்றோம்.

நாடகம், கூத்து, இசை என்பவற்றை வளர்க்கும் நோக்கமாக வெளியிடப்படும் இந்தச் சஞ்சிகையில் நாடகங்கள், கூத்துக்கள் பற்றிய ஆழமான பல கட்டுரைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

நம்பிக்கை தரும் நாடகப்போட்டிகள் என்ற தலைப்பில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பாடசாலைகளுக்கிடையில் நடத்திய அபிநயப்பாடல்,குழு இசை, குழு நடனம், சிறுவர் நாடகம், தனிநடிப்பு பற்றிய நிகழ்வுகள் தொடர்பான விமர்சனம் இடம்பெற்றுள்ளது.

சுவிஸில் தமிழன் தலைநிமிர்த்திய நாடகங்கள் என்ற தலைப்பில் நாடகங்கள், அரங்கக்கல்லூரிகள் ஆகியன சம்பந்தமான நாடகத்தில் ஆர்வமுள்ள ரமணனின் பேட்டி - புலம்பெயர் நாடுகளில் தமிழ் நாடகங்களின் செல்வாக்கு பற்றியும் பல அரிய தகவல்களையும் தந்துள்ளனர்.

முழுமையாக நாடகத்துக்காக வெளிவரும் கூத்தரங்கம் சஞ்சிகையை தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டியது முக்கிய கடமையாகும்.

- சரவணன்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## இரு ஊர்காவல்...

இவரிடமிருந்து ரி-56 ரக துப்பாக்கி மற் றும் ரவைகள் பறித்து எடுக்கப்பட்டுள்ளன. வவுனியாவின் தென்கிழக்குப் பகுதியில் 10 கிலோ மீற்றர் தொலைவில் இந்தச் சம்பவம் நடந்தது.

ஊர்காவல் படையில் நான்கு நாட்களுக்கு முன்னர் தான் செனிவிரத்ன சேர்ந்ததாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை - அனுராதபுர மாவட்டத்தில் உள்ள கெப்பிற்றிக்கொலாவ பகுதியில் ஊர்காவற் படைச் சிப்பாய் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நேற்று முன்தினம் காலை 10.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது. ஆனந்த பிறேமதிலக என்ற ஊர்காவலர் ஹமில்லபொத்தான என்ற தமது ஊருக்குச் சென்று கொண்டிருந்தபோதே அடையாளம் தெரியாத ஆயுதபாணிகளால் இவர் சுட்டுக் கொல்லப்பட்டார். இவரை சுட்டுக்கொன்ற நபர்கள் ஆயுதத்தையும் எடுத்துக் கொண்டு தப்பிச்சென்றுவிட்டதாக வவுனியா பொலிஸ் அத்தியகட்சகர் ஜெகத் அபய சிறி குணவர்த்தன தெரிவித்தார்.

## மங்களவுக்கு...

ஒரு நாட்டின் வெளியுறவு அமைச்சருக்கு வழங்கப்படுகின்ற வரவேற்புக்கு அதிகமானவரவேற்பு மங்கள சமரவீரவுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனால் தாம் பாரபட்சமாக நடத்தப்படுவதான உணர்வு தமிழ்மக்களுக்கு ஏற்படும் வாய்ப்பு உண்டு என அவர் தெரிவித்தார்.

## புலனாய்வுப்பிரிவு...

இவர் கடந்த இரண்டாம் திகதி விடுமுறையில் வீட்டுக்குச் சென்றுள்ளார். எனினும், இவர் வீடு போய்ச் சேரவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. இதுதொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்ட போது- அவர் முகாமிலிருந்து வவுனியாவுக்கு வந்த பின்னர் காணாமற்போனது தெரியவந்தது. அவர் காணாமற்போனபோது கடமை நேரங்களில் அவர் பயன்படுத்தும் பிஸ்ரலும் அவரிடமிருந்துள்ளது.

இவர் காணாமற்போனது தொடர்பாக கடந்த 6ஆம் திகதி வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இவர் விடுதலைப்புலிகளால் கடத்தப்பட்டுள்ளாரா அல்லது வேறு ஏதாவது காரணங்கள் உண்டா என்பதை கண்டறிய பொலிஸ் மற்றும் இராணுவ பொலிஸ் என்பன விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (தே)

## குடாநாட்டில்...

காட்டுப் பகுதியில் பொதுமக்களை படையினர் கண்மூடித்தனமாக தாக்கினர். இதனால் அந்தப் பகுதியில் பதற்றமான சூழல் நிலவியது.

அதேவேளை, நேற்றுக் காலை 10.25 மணியளவில் இளவாலைப் பகுதியில் பொலிஸாரின் ஜீப் வண்டியை இலக்கு வைத்து கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தச் சம்பவத்தில் பொலிஸ் தரப்பில் ஒருவர் படுகாயமடைந்தார். அத்துடன், இருபாலை கட்டைப்பிராய் பகுதியிலும் ரோந்து சென்ற படையினர் மீது இனந்தெரியாத நபர்களால் கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டது.

கட்டைப்பிராய் குளத்தடியில் நேற்றுக் காலை 11.45 மணியளவில் நடத்தப்பட்ட இந்த கிரனேட் தாக்குதலில் படையினருக்கு ஏற்பட்ட சேத விபரங்கள் தெரியவரவில்லை.


இதேவேளை, உரும்பிராய் பகுதியிலும் படையினரின் காவலரண் மீது கிரனேட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக உறுதிப்படுத்தப்படாத தகவல்கள்தெரிவித்தன.

அதேவேளை, நேற்று மாலை 7.05 மணியளவில் யாழ். ஆஸ்பத்திரி வீதி - கோவில் வீதிச் சந்தியில் படையினர் மீது கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டது. இதையடுத்து அந்தப் பகுதியில் சூட்டுச் சத்தங்கள் கேட்டன.

இதையடுத்து படையினரின் வாகனங்களின் நடமாட்டம் அவதானிக்கப்பட்டது. இதில் படைத்தரப்பில் சேதங்கள் ஏற்பட்டதா என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை. (90)

# கண்காணிப்புக்குழு விலகினால் போர்நிறுத்தமும் முறிவடையும்!

## உல்ப் ஹென்றிக்சன் பேட்டி



கொழும்பு -

கண்காணிப்பு பணியிலிருந்து தாம் விலகினால் போர்நிறுத்த உடன்படிக்கையும் இல்லாமல் போய்விடும் என போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்சன் தெரிவித்தார்.

கொழும்பில் ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் தமது பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளலாம் என்று முடிவு செய்தால் இந்த தீவில் நாங்கள் தொடர்ந்து இயங்குவோம். இல்லையெனில் இயங்க மாட்டோம்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு இல்லாத நிலையில் போர்நிறுத்த ஒப்பந்தமும் இல்லாமல் போகும்.

அரசாங்கமும், அரச படையினரும் இணைந்து செயற்படவேண்டும். அரசாங்கத்தின் ஆணைக்கு அரச படையினர் கீழ்படிந்து செயற்படவேண்டிய காலம் இது.

அண்மையில் உண்மைகளின் அடிப்படையிலான அறிக்கை கண்காணிப்புக் குழுவினரால் வெளியிடப்பட்டது. இதில் சில விடயங்களை ஏற்றுக்கொள்ளமுடியாத நிலையில்- அரசாங்கம் சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய அவசியம்.

பொதுமக்கள் பகுதியில் நடைபெறும் படுகொலைகள் குறித்த அரசாங்கத்தின் விசாரணைகள் பாரபட்சமாக உள்ளன. வடக்கு-கிழக்கில் வசிக்கும் பொதுமக்கள் தங்களது மற்றும் குழந்தைகளின் எதிர்காலம் குறித்த அச்சத்துடன் வாழ்கின்றனர்.

முறையான விசாரணைகளை அரசாங்கம் நடத்தினால்தான் கொடூரப் படுகொலைகளை நிறுத்த முடியும்.

அரசாங்கம் இந்தப்படுகொலைகள் தொடர்பாக கண்ணை மூடிக் கொண்டு இருக்கிறது. எந்தவொரு சம்பவங்களிலும் கூட விசாரணைகள் தொடங்கப்படவில்லை. அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தான் இத்தகைய படுகொலைகள் நடைபெறுகின்றன. இதற்கான பொறுப்பு பொலிஸாரிடம் உள்ளபோதும் படுகொலைகள் தொடர்பான தரவுகளை கண்காணிப் புக் குழுவுக்கு அனுப்புவதில்லை.

நிறைய வழக்குகளை நிலுவையில் வைத்துக்கொண்டு தரவுகளை அளிப்பதில் முடக்கத்தை பொலிஸார் ஏற்படுத்தி வருகின்றனர். அந்த வழக்குகள் அனைத்தும் விசாரணைக்குள் எடுக்கப்படவேண்டியவை. அனைத்து வசதிகளும், மனித வளங்களும் உள்ள நிலையில் எதுவித காரணமும் கூற முடியாது.

இந்தப்படுகொலைகள் தொடர்பான சர்வதேச சமூகத்தின் விசாரணைகளுக்கு அரசாங்கம் ஒத்துழைக்க வேண்டும். அப்போது தான் தீர்வு காணப்படும். அப்பாவி குழந்தைகள் நாளாந்தம் கொல்லப்பட்டுக் கொண்டிருப்பதை சர்வதேச சமூகம் மறுக்கவில்லை. சில வாரங்களுக்கு முன்பாக வட பகுதியில் நடைபெற்ற படுகொலைகள் தொடர்பான பொலிஸ்மா அதிபரின் முடிவை கண்காணிப் புக் குழு எதிர்பார்த்துள்ளது.

இலங்கையின் வடக்கு-கிழக்கு குறித்து ஊடகங்களுக்கும், சர்வதேச சமூகத்துக்கும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துவரும் கருத்துக்களுக்கும், யதார்த்த கள நிலைமைகளுக்கும் முரண்பாடு உள்ளது.

கடற்கண்காணிப்பு பணிகளில் ஈடுபடும் கண்காணிப்புக் குழுவினர் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை. விடுதலைப்புலிகள் தரப்பிலிருந்து உறுதியான உத்தரவாதம் அளிக்கப்படாத வரையில் கடற்படையினரின் கலங்களில் செல்லமாட்டோம்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் பகுதிகளில் தற்போது கண்காணிப்புக் குழுவில் இரு நாட்டுப் பிரதிநிதிகளே அனுமதிக்கப்பட்டுள்ளனர். நோர்வே மற்றும் ஐஸ்லாந்து பிரதிநிதிகளே உள்ளனர். நோர்வே தரப்பில் தங்களது பிரதிநிதிகளை அதிகரிப்பதாக இல்லை என்று தெரிவித்து விட்டனர் என்று கண்காணிப்புக்குழு தலைவர் ஹென்றிக்சன் தெரிவித்தார்.

## மங்கள சமரவீர...

மணிக்கு அரச மாளிகையில் மங்கள சமரவீர சந்தித்தார். இந்தச் சந்திப்பு 2.15 வரை நடைபெற்றது.

இனப்படுகொலை செய்யும் ஒரு அரசாங்கத்தின் அமைச்சரை நோர்வே மன்னர் சந்திப்பதை எதிர்த்து 400க்கும் மேற்பட்ட நோர்வே தமிழர்கள் அரச மாளிகையின் முன் திரண்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர். நோர்வே மன்னருடனான சந்திப்பு முடியும் வரை சுமார் ஒரு மணிநேரம் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

தமிழ் மக்கள் மீது அப்பட்டமான படுகொலை வெறியாட்டங்களையும், மனித உரிமை மீறல்களையும் மேற் கொண்டு வரும் ஒரு பயங்கரவாத அரசின் பிரதிநிதியை நோர்வே மக்களின் சின்னமாகவும், நோர்வே தேசத்தின் சின்னமாகவும் விளங்கும் மன்னர் சந்தித்தது- தமிழ் மக்களைக் கவலையடையச் செய்கின்றது என்று ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் தெரிவித்தனர்.

"மங்கள சமரவீர - பயங்கரவாத அரசின் அமைச்சர்", "சிறிலங்கா - தோற்றுப்போன ஒரு தேசம்", "குருதியில் குளிக்குது தமிழினம். உலகே! சிறிலங்கா அரச பயங் கரவாதத்தை நிறுத்து!", "தமிழர்களைக் கொல்லாதே! சிறுவர்களைக் கொல்லாதே!"

என்று ஆங்கிலத்திலும், நோர்வேஜிய மொழியிலும் எழுதப்பட்ட பல்வேறு பதாகைகளையும்- அல்லைப்பிட்டி மற்றும் மன்னார் வங்காலைப் படுகொலை அவலங்களின் படங்களையும் தாங்கியவாறு பெண்கள், இளையோர், பெரியவர்கள் என 400க்கும் மேற்பட்ட ஒஸ்லோ வாழ் தமிழ் மக்கள் தமது உள்ளக் குமுறல்களை வெளிப்படுத்தினர். இதனிடையே தமிழ் அமைப்புகளின் ஒன்றியத்தின் சார்பில் நோர்வே மன்னருக்கு மனு ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டது.

தமிழ் சிறார்களையும், பொதுமக்களையும் கொன்று குவிக்கும் பயங்கரவாத அரசாங்கத்தின் பிரதிநிதிக்கு நோர்வே மன்னரின் வரவேற்பும், மதிப்பும் அளிக்கப்படுவது- நோர்வேயை தமது இரண்டாவது தாயகமாக நேசிக்கின்ற நோர்வேத் தமிழர்களை பெரும் கவலையடையச் செய்கிறது என்று அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்து.

இதேவேளை, தமிழர் தரப்பு நியாயங்களை எடுத்துச் சொல்வதற்கு மன்னரைச் சந்திப்பதற்கான நேரமும் தமிழ் அமைப்புகளின் ஒன்றியத்தால் கோரப்பட்டுள்ளது.

# சமதரப்பு நிலை ஏற்படுத்துவோம்...

நேற்றுப் பிற்பகல் 2.10மணியளவில் கிளிநொச்சியை வந்தடைந்தனர்.

கல்விக் கழக பொறுப்பாளர் வெ. இளங்குமரன், மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம், தளபதி வீமன், புலிகளின் குரல் நிறுவனப் பொறுப்பாளர் நா. தமிழன்பன், அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன், மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி உட்பட தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் இவர்களை வரவேற்றனர்.

அதன் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு சு.ப. தமிழ்ச்செல்வன் பேட்டியளிக்கையில் -

நோர்வே அரசின் அழைப்பை ஏற்று அதற்கு மதிப்பு கொடுக்கும் முகமாகத்தான் நாங்கள் சென்றிருந்தோம்.

எமது தலைமைப்பீடத்தின் நிலைப்பாடுகளையும், சில முக்கிய மான தீர்மானங்களையும் தெளிவுபடுத்தியிருக்கிறோம். அதுதான் எமது பயணத்தின் நோக்கம். எமது பயணத்தின் நோக்கத்தை நிறைவு செய்து திரும்பியிருக்கிறோம்.

எமது பயணம் வெற்றிகரமாக அமைந்தது என்று சொல்லமுடியாது. எமது நிலைப்பாடுகளை நோர்வே அனுசரணையாளர்களுக்கும், போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினருக்கும் தெரியப்படுத்தவே சென்றோம்.

இந்தப்பயணத்தை அவர்கள் தங்களுக்கு சாதகமான ஒரு சர்வதேச அபிப்பிராயத்தை உருவாக்குவதற்கான பேச்சுவார்த்தையை நடத்த வேண்டும் என்று கூறினார்கள். நாங்கள் அதற்கு இணங்கவில்லை.

எங்கள் மக்கள் படுகொலை செய்யப்பட்டுக் கொண்டிருக்கிற போதும் எமது பிரதேசங்கள் மீது தாக்குதல்கள் தொடுத்துக் கொண்டிருக்கக் கூடிய சூழ்நிலையில் - பேச்சுக்களை நடத்துவதற்காக நாங்கள் நோர்வே செல்லவில்லை.

அரசாங்கத் தூதுக்குழுவினருடன் பேச்சு நடத்தும் சூழல் இன்று இல்லை. பேச்சுவார்த்தைக்கான உகந்த சூழ்நிலை உருவாக்காமல் அரசாங்கத் தரப்போடு நேரடிப் பேச்சுக்களை ஒருபோதும் முன்னெடுக்க முடியாது. இதை தெட்டத்தெளிவாக நோர்வே அனுசரணையாளர்களுக்கு தெரிவித்துள்ளோம்.

நோர்வேயில் நாங்கள் நிற்கும் போது குழந்தைகள், மக்கள் என வயது வேறுபாடின்றி இங்கு கொல்லப்பட்டனர். எங்களது போராளிகள், தளபதிகள் மற்றும் பொறுப்பாளர்கள் மீதான தாக்குதல் நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டது.

இங்கே ஒரு யுத்த சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது. போர்நிறுத்த ஒப்பந்தம், சமாதானமுயற்சிகள் அனைத்துமே கேள்விக்குறியாகியுள்ளன.

நோர்வேக்கு நாங்கள் செல்வதற்கான காரணத்தை விளக்கியிருந்த போதும் கூட, எப்படியாவது ஒரு பேச்சு வார்த்தையை நடத்தி வெற்றி பெற்று விடலாம் என்று நோர்வே முனைந்தது. ஆனால், அந்த முயற்சிக்கு நாங்கள் இடம் கொடுக்கவில்லை. எம்முன் உள்ள முட்டுக்கட்டைகள், தடைகள் நீக்கப்படாமல் நாங்கள் பேச்சுக்கு செல்லமாட்டோம்.

ஐரோப்பியத்தடைக்குப் பின்னால் எம்மீது கடுமையான அழுத்தங்களை பிரயோகிக்கும் உத்தியைக் கையாள்கின்றனர். இத்தகைய அழுத்தங்களை தருவதன் மூலம் தமிழர் தரப்பு பணியும் நிலையில் இல்லை.

நோர்வே இருதரப்பினருக்கும் அனுப்பியுள்ள 5கேள்விகள் தொடர்பாக எமது தேசியத்தலைவருடன் கலந்து ஆலோசித்த பின்பு தான் முடிவெடுக்கப்படும்.

அர்த்தமற்ற அழுத்தங்கள் தமிழர் தரப்பையும், தமிழீழ விடுதலைப்புலிகளையும் ஒருபோதும் அடிபணியச் செய்துவிட முடியாது.

நியாயமான, நீதியான அணுகுமுறைகளுக்கும் நடுநிலையான செயற்பாடுகளும் எமது மக்களுக்கு நன்மையளிக்கக் கூடிய முன்னெடுப்புக்களும் தான் தமிழர் தரப்பை சமரச முயற்சிக்கு கொண்டு செல்லும்.

நோர்வேக்கு அதிகாரமற்ற- அனுபவமற்ற- சமரச முயற்சிகளுக்கு ஒரு குழுவை அரசாங்கத்தரப்பினர் அனுப்பி வைத்திருந்தனர்.

அவர்கள் அரை நாளுடன் ஓடிவிட்டனர். இவ்வளவு கால சமரச முயற்சிகளில் ஒரு அநாகரீகமான செயற்பாடு இது. அதுபற்றி எங்களுக்கு பிரச்சினையில்லை. எங்கள் பணியை நாங்கள் முடித்துவிட்டோம்.

சமாதான முயற்சிகளை சீர்குலைத்து எம்மீது போரைத் திணிப்பதற்கான செயற்பாடுகளிலேயே அரசாங்கம் தீவிரம் காட்டி வருகிறது.

நாங்கள் சமரச முயற்சிகளை விரும்பினாலும் - மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் ஒரு கொடிய யுத்தத்தை, இனப்படுகொலையை நிகழ்த்த திட்டமிட்டுள்ளது. இதை நோர்வேயில் நாம் அம்பலப்படுத்தினோம்.

கடந்த 4வருட காலத்தில் எமது தலைமைப்பீடம் மேற்கொண்ட நல்லெண்ண நடவடிக்கைகள் தொடர்பான முக்கியமான அறிக்கையை நாங்கள் நோர்வேயில் வெளியிட்டோம். அதேபோல இப்போது நாம் எத்தகைய நிலைப்பாட்டில் இருக்கிறோம் என்பதை சர்வதேச சமூகம் புரிந்து கொள்ளும் வகையில் விளக்கியுள்ளோம்.

நோர்வேயை பொறுத்தவரை இருதரப்பையும் பேச்சு மேசையில் இருத்தி நற்பெயரை அடைய வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். அதனால்தான் நோர்வேயிடம் பேச்சு மேசையில் எங்களை இருத்துவதை விட்டு விட்டு தடைகளை நீக்குவதற்கு முயற்சி செய்யுங்கள் என்று கூறியுள்ளோம்.

கடந்த 4ஆண்டு காலத்தில் போர்நிறுத்த ஒப்பந்தம் தொடர்பாக இணக்கப்பாடு காணப்பட்ட எதனையுமே அரசாங்கம் செய்யாதிருப்பதுதான் இன்றைக்குப் பிரச்சினையே. இன்று இந்த உச்சக்கட்டத்தை அடைந்த நிலையிலும் அது செய்யப்படவில்லை. ஆகவே, இலங்கை அரசாங்கத்தை வழிக்கு கொண்டுவர வேண்டும். ஆனால் இலங்க்கை அரசாங்கம் அப்படியான ஒரு நிலையில் இல்லை.

இன்று நாங்கள் விமான நிலையத்துக்கு வந்தபோது நீண்ட நேரம் எம்மை காத்திருக்க வைத்து சிரமப்படுத்தி அநாகரீகமாக நடந்து கொண்டனர். இப்படியான செயற்பாடுகள் எல்லாம் இனி சமாதான முயற்சிகள் நடைபெற உதவாது.

இருதரப்பு சமநிலையை அரசாங்கம் ஏற்காவிட்டால் நாங்கள் அந்த நிலையை உருவாக்குவோம் என்று அரசியல்துறைப் பொறுப்பாளர் தெரிவித்தார்.

## படையினரின்...

சடலம் நேற்றிரவுவரை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்படவில்லை என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

## மனைவியின்...

அப்போது நாற்றுப்பாலத்தடி என்னும் இடத்திலுள்ள ஊர்காவல் படையினர் மற்றும் இராணுவத்தினரின் காவலரண் அருகில் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் படையினரால் அவரது மனைவியின் முன் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

எனினும், சுட்டுக்கொல்லப்பட்டவர் தொடர்பான விபரங்கள் வெளியாகவில்லை.

## கொட்டடியில்...

மருத்துவ பரிசோதனைக்காக சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

சடலம் பிரேதபரிசோதனைக்காக போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

கொல்லப்பட்டவர் ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்க ஆதரவாளர் என்று பாதுகாப்பு வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 15.06.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.